பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 23 செவ்வாய்க்கிழமை (06.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 190

# அல்லைப்பிட்டி படுகொலை விசாரணை ஒழுங்குமுறையாக நடத்தப்படவில்லை!

## பொலீஸார் மீது ஊர்காவற்றுறை நீதிவான் விசனம்

யாழ்ப்பாணம், ஜூன்6

அல்லைப்பிட்டியில் பொதுமக்கள் கூண்டோடு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான பொலீஸ் விசாரணைகள் ஒழுங்கு முறையாக நடத்தப்படவில்லை என்று கடும் விசனம் தெரிவித்துள்ளார் ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் ரொக்ஸி.

கடந்த மாதம் 13ஆம் திகதி தீவகத்தில் 13 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முற்பகல் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்றது. படுகொலைகள் தொடர்பாக கடந்த மாதம் 19ஆம் திகதி இடம்பெற்ற மரணவிசாரணையின்போது, அல்லைப்பிட்டிப் படுகொலைச் சம்பவத்தில் உயிர்தப்பியவர்களான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கடற்படையினர்தான் இக் கொலையைச் செய்தார்கள் என வாக்குமூலம் அளித்திருந்தனர். அவர்களைத் தம்மால் அடையாளம் காட்டமுடியும் எனவும் - தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த முகாமைச் சேர்ந்த கடற்படையினரை நேற்றைய தினத்திற்கு முன் அடையாள அணிவகுப்பொன்றிற்கு உட்படுத்துமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக கொழும்பிலிருந்து வந்த சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மகேஷ் பெரேரா தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு, திரும்பி

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஒஸ்லோ சந்திப்பின்போது புலிகள் கடும் போக்கைக் கடைப்பிடிப்பர்!

## தலைவர் பிரபாவின் இறுக்கமான நிலைப்பாட்டை பிரதிபலிப்போம் என்கின்றார் தமிழ்ச்செல்வன்

கொழும்பு, ஜூன் 06

**"போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பில் ஒஸ்லோவில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள பேச்சுகளின்போது கடுமையான நிலைப்பாட்டுடன் சில யோசனைகளை அரசுக்கு வெட்டு ஒன்று துண்டு இரண்டாக முன்வைப்போம். அரசு அதற்கு இணங்குமானால் அமைதி முயற்சிகள் தொடரும். இல்லையேல் அமைதி முயற்சிகள் தொடர்வதற்கான சாத்தியம் இல்லாமல் போகும்."**

**- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன். ஒஸ்லோ சந்திப்பில் கலந்து கொள்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட முன்னர் கொழும்பில் வைத்து 'உதயன்'இற்குக் கருத்து வெளியிட்டபோதே தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்தார்.**

"ஒஸ்லோ சந்திப்புக்களில் நாம் இறுக்கமான நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்போம். ஐரோப்பிய ஒன்றியம் எமது இயக்கத்தைத் தடை செய்த பின்னர் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் டென்மார்க், பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாட்டு உறுப்பினர்களின் நிலைமை என்ன? அவர்களிடமிருந்து பக்கச் சார்பற்ற, நடுநிலையான சேவையைப் பெற முடியுமா? என்பன கேள்விகள் எழுகின்றன.

இந்தப் பிரதிநிதிகள் தொடர்ந்து இதில் அங்கம் வகிப்பது போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகளில்கூட சமதரப்பு அந்தஸ்தைப் பாதிக்கும். எனவே, இது தொடர்பான எமது நிலைப்பாட்டை உறுதியாகக் கூறவுள்ளோம் - என்றும் தமிழ்ச்செல்வன் கூறினார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. சிறை அசம்பாவிதம் நால்வர் நீதிமன்றில் ஆஜர்

மட்டக்களப்பு, ஜூன்6

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து கைதிகள் எட்டுப் பேர் ஆயுதங்களைக் காட்டித் தப்பிச்சென்றமை தொடர்பாகச் சிறைச்சாலையின் பதில் அதிகாரியும் சிறைக்காவலர்கள் மூவரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

சம்பவதினம் தப்பிச் சென்ற கைதிகள் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தவர்களான பதில் சிறை அதிகாரி சந்தியாம் பிள்ளை

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இன்று தாயகத்தில் அனுஷ்டிப்பு

வட்டக்கச்சி, ஜூன்6

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் தமிழீழ தாயகமெங்கும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான பிரதான நிகழ்வு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முற்பகல் 9 மணிக்கு கிளிநொச்சி அரச செயலக முன்றலில் ஒன்று

(10ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் இன்று மகேஸ்வரன் பிரஸ்தாபம்

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தமிழ் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளமை தொடர்பாக அரசு நீதியான விசாரணைகளை நடத்த வேண்டுமென ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் இன்று நடைபெறும் நாடாளுமன்ற அமர்வின்போது பிரஸ்தாபிப்பார் எனத் தெரிகிறது.

இந்த யுவதியின் மரணம் தொடர்பாக எந்த வித மூடிமறைப்புமின்றி நீதியான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை இனம் காண வேண்டும் என்று மகேஸ்வரன் மன்றில் பிரஸ்தாபிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கை வன்முறைகளை விசாரிக்க சர்வதேசக் குழு அமைப்பது அவசியம்!

## மன்னிப்புச் சபை இணைப்பாளர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன்6

இலங்கையில் நடக்கும் வன்முறைகள் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு சர்வதேசக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆஸ்திரேலிய இணைப்பாளர் ரோபின் கில்பற்றிக் அம்மையார் தெரிவித்திருக்கிறார்.

அவுஸ்திரேலியாவிலுள்ள விக்டோரியா ஈழத் தமிழ்ச் சங்கமும் அதன் சக தமிழ் அமைப்புகளும் இணைந்து கடந்த சனிக்கிழமை மெல்போர்னில் நடத்திய கண்டனப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஸ்ரீலங்காவில் பரவலாக நடைபெற்று வரும் வன்முறைகள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான தாக்குதல்கள், காணாமல் போதல் சம்பவங்கள், தேக்கமடைந்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நீர்கொழும்புச் சிறையில் தமிழ் யுவதி மரணம் அதிகாரிகள் அசமந்தம்; அதனால் பரிதாபம்!

நீர்கொழும்பு, ஜூன் 06

குடிவரவு, குடியகல்வு சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளம் தமிழ்ப் பெண் ஒருவர், ஆஸ்த்துமா நோயினால் அவதிப்பட்டு, பலபேர் பார்த்திருக்க துடிதுடித்து இறந்தார்.

நேற்று அதிகாலை நீர்கொழும்பு சிறைச்சாலையின் சிறைக்கூடத்திற்குள் இந்தப் பரிதாப சம்பவம் இடம் பெற்றது.

வெளிநாடுகளுக்குச் செல்ல முயன்று குடிவரவு, குடியகல்வு சட்டத்தை மீறினார்களென்று குற்றஞ்சாட்டப்பட்டு கைதுசெய்யப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்திலிருந்து புலிகளுக்கு ஆயுதமா? முழுமையான விவரங்களை உடனே தருக!

### அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கோரிக்கை

பாங்கொங், ஜூன் 06

தாய்லாந்திலிருக்கும் விடுதலைப் புலிகள் தமக்குத் தேவையான ஆயுதங்களை வாங்குகிறார்கள் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் அண்மையில் தெரிவித்திருக்கும் தகவல் குறித்து தாய்லாந்து வெளிவிவகார [illegible] கன்தாதி சுபமோங்கன் இலங்கையுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு மேலதிகத் தகவல்களை தருமாறு கோரவுள்ளார்.

இந்தத் தகவல்கள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எவ்வாறு கிடைத்தது என்பதை அவருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தில் சயனைட்டை அறிமுகப்படுத்திய மாவீரர்

**தியாகி பொன்.சிவகுமாரனின் 32 ஆவது நினைவு தினம் இன்றாகும். அதையொட்டி இந்த ஆக்கம் வெளியாகிறது.**

ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் சயனைட்டையும் அதனால் விளையும் தற்கொடையையும் அறிமுகப் படுத்திய மாவீரர் பொன். சிவகுமாரனின் 32 ஆவது நினைவு தினம் இன்றாகும்.

பொன்னுத்துரை - அன்னலட்சுமி தம்பதியின் மகனான உரும்பிராயில் பிறந்தவர் சிவகுமாரன். யாழ்.இந்துக் கல்லூரியில் கல்வி கற்றார்.

அக்கால கட்டத்தில் ஸ்ரீலங்காவின் இனவாத அரசுகள் தமிழினத்தின் மீது ஏவி விட்ட அடக்கு முறைகள் சிவகுமாரனின் எழுச்சிக்கு வித்தாகின. குறிப்பாக தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்கு உலைவைக்க சிறிமாவோவின் அரசு அறிமுகப்படுத்திய தரப்படுத்தல் முறை மாணவப் பருவத்தில் இருந்த சிவகுமாரனின் போராட்ட நெருப்புக்கு நெய்யானது. அஹிம்சை வழி புரியாத இனவாதிகளுக்கு ஆயுத வழியில் புரிய வைக்கும் உத்வேகம் தமிழ் இளைஞர்களிடையே முளைவிட்ட காலமது. இந்நிலையில், தமிழ் மாணவர் பேரவையில் தன்னை 1971 ஆம் ஆண்டு சிவகுமாரன் இணைத்துக்கொண்டார். எண்ணங்கள் ஒன்றாய்க் கொண்ட சில துணைகள் சிவகுமாரனுக்கு அங்கு கிடைத்தன.

தரப்படுத்தலை எதிர்க்கும் தமது உணர்வை இனவாதிகளுக்கு புரிய வைக்கத் தீர்மானித்தார் சிவகுமாரன். அப்போதைய துணை அமைச்சர் சோமவீர சந்திரசிறி உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்ள வந்தவேளை அவரை இலக்கு வைத்து குறித்த நேரத்தில் வெடிக்கும் வெடிகுண்டை வைத்தார் சிவகுமாரன். அதில் அமைச்சர் தப்பிய போதும் இக்குற்றச்சாட்டில் சிவகுமாரன் கைதானார். ஆயினும், தகுந்த சாட்சியங்கள் இல்லாததால் அவர் விடுதலையானார்.

பின்னர் ஈழத்தமிழர்களின் எதிர்ப்புணர்வை இனவாத அரசுகளுக்கு உணர்த்தும் பல நடவடிக்கைகளை சிவகுமாரன் மேற்கொண்டார்.

யாழ். இரண்டாம் குறுக்குத் தெருவில் அப்போதைய மேயர் அல்பிரட் துரையப்பாவின் கார் வெடித்துச் சிதறியமை தமிழர்களின் மீதான அடக்கு முறையின் அடையாளமான பொலீஸ் அதிகாரி சந்திரசேகர மீதான கையெறி குண்டுத் தாக்குதல் போன்றவை சிவகுமாரனின் போராட்ட உணர்வின் விளைவுகளே.

போராட்ட முறையானது கொள்கைகளை நிலைநாட்ட, இலக்குகளை அடையப் பயன்படுத்தப்படும் மார்க்கமே தவிர போராட்ட முறையே கொள்கை அல்ல என்பதை வலியுறுத்தியவர் பொன்.சிவகுமாரன். ஆயுதப் போராட்டத்தை தனது வழியாக வரித்துக் கொண்ட பொன்.சிவகுமாரன் தமிழ்மக்கள் எழுச்சிகொண்டு அஹிம்சை வழியில் நடத்திய போராட்டங்களை பெரிதும் மதித்தார்.

தமிழர்களின் விடுதலைப் போரின் ஆரம்ப கால வித்தான சிவகுமாரன் 1974 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 5ஆம் நாள் ஸ்ரீலங்கா பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்டார். தப்ப முடியாது, இனி பிடிபடுவது நிச்சயம் என்ற நிலையில் பேனாவிற்குள் மறைத்து வைத்திருந்த சயனைட்டை உட்கொண்டார் தியாகி சிவகுமாரன். நீர்வேலி கூழந்தன் மண்ணில் சாய்ந்து தற்கொடை தந்தார் தியாகி சிவகுமாரன்.

ஆனால், அன்று விஸ்வரூபம் எடுத்தது ஈழத்தமிழரின் சுதந்திரப் போர்.

தமது போராட்டப் பாதையில் தியாகி சிவகுமாரன் நடத்திய தாக்குதல்கள் வேண்டுமானால் இலக்கை அழிக்காமல் போயிருக்கலாம். ஆனால், இன்று நம் மண்ணில் விதைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மாவீரர்களில் மூத்தவரான தியாகி சிவகுமாரன் ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு ஊற்றுக் கண் என்பது அழியாத உண்மையாகும்.



# எமது தேசியத் தலைவரின் ஒரே ஒரு சொல்லுக்காகவே காத்திருக்கிறோம்

## கேணல் சொர்ணம் தெரிவிப்பு

திருகோணமலை,ஜூன்6

தமிழர்களை அச்சுறுத்திப் படுகொலை செய்துவரும் அனைத்து வெறியர்களையும் கொன்றொழித்து தமிழ் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடச் சிறந்ததொரு வழியினை அமைத்துத் தருவதற்காக, எமது தலைவரின் ஒரே ஒரு சொல்லுக்காகவே காத்திருக்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் ராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆளுகைகளுக்குட்பட்ட பகுதியான வெருகல் பிரதேசத்தில் தங்கிவரும் 1000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களை கடந்த சனிக்கிழமை, வெருகல் ஆலய முன்றலில் வைத்து திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம் சந்தித்தார். அரசியல்துறை மாவட்ட பொறுப்பாளர் சி. ஏழிலன், தளபதி தேவன் ஆகியோரும் உடனிருந்தனர். மக்களின் குறைகளை அவர்கள் கேட்டறிந்தனர்.

மாணவர் அமைப்பு பொறுப்பாளர் புரட்சி தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அங்கு உரை நிகழ்த்திய கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் ஆற்றிய உரையில் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களாகிய நாம் எமது பிரதேசத்தில், சுதந்திரமாக நிம்மதியாக வாழவேண்டும் என்றே விரும்புகின்றோம்.

எம் நிலத்தில் எதிரியை விரட்டி நாம் நிரந்தரமாக நிம்மதியாக வாழக்கூடிய நிலை வெகு விரைவில் தோன்றும். ராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களை கைப்பற்றி எமது ஆழுகைக்குட் கொண்டுவர இப்போதும எம்மால் முடியும். எமது படைக்கலங்களும் நாமும் பாரிய அளவில் முன்னேற்றம் அடைந்த நிலையில் எந்த வேளையிலும் தயாராகவே உள்ளோம். நாங்கள் தற்போது எமது தேசியத் தலைவரின் ஒரே ஒரு சொல்லுக்காகவே காத்திருக்கின்றோம். அவரின் அனுமதி கிடைத்ததும் தமிழர்களை அச்சுறுத்திப் படுகொலை செய்து வரும் அனைத்து வெறியர்களையும் கொன்றொழித்து அங்கு தமிழ் மக்கள் நிம்மதி மூச்சுவிட சிறந்ததொரு வழியினை அமைத்துத்தருவோம் - எனவும் தெரிவித்தார்.

அங்கு உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்த்துறைப்பொறுப்பாளர் சி.எழிலன், "அரச, ராணுவ அக்கிரமிப்பு மற்றும் படுகொலைகள் காரணமாக அச்சமடைந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசு இதுவரை எந்தவொரு நிவாரண ஏற்பாட்டினையும் செய்து கொடுக்கவில்லை. அதேநேரம் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் கூட இந்த இடங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்ய ராணுவத்தரப்பு தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகின்றது.

"இதேவேளை ராணுவத்தினரும், அதன் கூலிப்படைகளான ஒட்டுப்படைகளும் இணைந்து தொண்டர் நிறுவனங்களைத் தொடர்ந்தும் அச்சுறுத்தி வருவதோடு நிறுவனங்களை மையமாக வைத்து தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றமை அவர்களின் தமிழர்கள் மீதான உச்ச வன்முறைகளையே காட்டி நிற்கின்றது" எனவும தெரிவித்துள்ளார். (ம)



மூதூரில் கேணல் சொர்ணம், எழிலன் ஆகியோர் மக்கள் மத்தியில் உரையாற்றும்போது எடுக்கப்பட்ட படம்.

## புதிர்ப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ். வை.எம்.சி.ஏ. நிறுவனத்தால் நடத்தப்படும் வேதாகம புதிர்ப்போட்டி இன்று காலை 8.30 மணியளவில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஆரம்பப் பிரிவுப் பாடசாலையில் இடம்பெறும் என்று செயலாளர் ஜெயராஜசிங்கம் தெரிவித்தார். (190)

## பெரியபுலம் ம:வி. மாணவர்களுக்கு!

யாழ்ப்பாணம், ஜூன்6

யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் தரம் 9, தரம் 11 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களை நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலைக்கு வருகை தருமாறு பாடசாலை முதல்வர் தி.கிருஷ்ணகுமார் கேட்டுள்ளார்.

## வற்றாப்பளை பொங்கல் கலந்துரையாடல்கள்

வட்டக்கச்சி,ஜூன்6

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கலையொட்டி விசேட கலந்துரையாடல்கள் இன்றுமுதல் இடம்பெறவுள்ளன.

இன்று பி.ப. 3 மணிக்கு காவடி வாடகைக்கு வழங்குவதற்கான கலந்துரையாடலும்-

நாளை பி.ப. 4 மணிக்கு ஐஸ்கிறீம் வியாபாரிகளுக்கான கலந்துரையாடலும் - எதிர்வரும் 9ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு வியாபார நிலையங்களுக்கான நிலம் வழங்கல் தொடர்பான கலந்துரையாடலும் - இடம்பெறவுள்ளன. (405)

## பேராசிரியர் குமாரவடிவேல் நேற்றுப் பதவியேற்றார்

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ். பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராக பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் நேற்றுப் பதவியேற்றார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த விசேட பேரவைக் கூட்டத்தில் இவரைப் பதில் துணைவேந்தராக நியமிக்க ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டிருந்தது.

அவர் நேற்று உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றார்.

## மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளராக து.சுரேந்திரராஜா நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 3 வருடங்களாக விசாரணை அதிகாரியாக யாழ். அலுவலகத்தில் பணியாற்றிய இவரை இணைப்பாளராக ஆணைக்குழுவின் தலைமையகம் நியமித்துள்ளது.

இணைப்பதிகாரியாகப் பணியாற்றிய ரோகித பிரியதர்சன தமக்குக் கொலைமிரட்டல் விடுக்கப்பட்டதாகத்தெரிவித்து பதவி விலகியதை அடுத்தே சுரேந்திரராஜா இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (12)

## சுகாதாரத் திணைக்களத்தின் கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

சுகாதாரத் திணைக்கள நிறுவனத் தலைவர்களுக்கான மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல நிறுவனத் தலைவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (12-51)

## மின்சாரசபை வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஜூன்6

இலங்கை மின்சாரசபையின் வட பிராந்தியத்தில் கணக்காளர், மின் அத்தியட்சகர் பதவி களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கணக்காளர் பதவிக்கு ஓர் வெற்றிடமும் மின் அத்தியட்சகர் பதவிக்கு 14 வெற்றிடங்களும் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் நியமனங்கள் வழங்கப்படும்.

தகுதியுடையவர்கள் வட மாகாணத்தில் குறைந்தது 6 வருடம் தொடர்ந்து பணிபுரிய விரும்புபவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

தகுதியானோர் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை 'மேலதிக பொது முகாமையாளர் (பிராந்தியம்-01), 4ஆவது மாடி, இலங்கை மின்சாரசபை, இல 50, சேர். சிற்றம்பலம் ஏ ஹாடினர் மாவத்தை, கொழும்பு - 02' என்னும் முகவரிக்கு பதி[illegible] அனுப்பிவைக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

## யாழ். ஆஸ்பத்திரியின் அன்புலன்ஸ் சேவை நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூன்6

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ். போதனா வைத்தியசாலையின் தனியாருக்கான அன்புலன்ஸ் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது என வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பின் பொருட்டே தனியார் சேவையை வழங்கமுடியாதுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# சமதரப்பு அந்தஸ்தை வலியுறுத்தும் நிகழ்வாக ஒஸ்லோ சந்திப்பு

யுத்தமா? சமாதானமா?

மென் தீவிரப் போரைத் தொடர்ந்தும் மேற்கொண்டு, அதை முழு யுத்தமாக வெடிக்க வைக்கப் போகின்றீர்களா? அல்லது அமைதித் தீர்வுகாண்பதற்கான சமாதானப் பேச்சுகளில் இதய சுத்தியுடன் ஈடுபட விரும்புகின்றீர்களா?

- நாளை மறுதினம் நோர்வேயில் நடைபெறப் போகும் சந்திப்பின்போது இந்தக் கேள்வியைத்தான் இலங்கை அரச தூதுக் குழுவினரைப் பார்த்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கேட்பார்கள் எனத் தெரிகின்றது.

வெட்டு ஒன்று, துண்டு இரண்டாக விடயத்தை முடித்து வருமாறு கூறித்தான் தனது பிரதிநிதிகளை ஒஸ்லோவுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

இவ்வாறு வெளியாகும் தகவல்களைப் பார்க்கும் போது ஒஸ்லோ சந்திப்பு மிகச் சூடாக இருக்கும் என்று கருத முடிகின்றது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் தேடலில் இலங்கை அரசுத் தரப்பும், தமிழர்களின் பிரதிநிதிகளான புலிகள் தரப்பும் சம அந்தஸ்துடையவை என்ற அடிப்படை இணக்கப்பாட்டுக்கு அமையவே தற்போதைய சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்திய பின்னர்தான் அமைதி முயற்சிகளுக்கே புலிகள் இணங்கினர்.

ஆனால், அந்த சமதரப்பு அந்தஸ்து இன்று தமிழர்களைப் பொறுத்தவரை பங்கப்பட்டு, பழிக்கப்பட்டுப் போய் நிற்கின்றன.

பௌத்த - சிங்களப் பேரினவாதத்தில் ஊறித் திளைத்த தென்னிலங்கை சக்திகளின் ஆதரவோடு ஆட்சிப்பீடம் ஏறிய ஜனாதிபதி மஹிந்தரின் அரசு, அமைதி முயற்சிகளில் தமிழர் தரப்புக்கு சம அந்தஸ்து தருவதை அடியோடு மறுத்து நிற்கின்றது.

மறுபுறம், அமைதி முயற்சிகளில் ஈடுபட வேண்டிய தரப்புகளில் ஒன்றை மட்டும் தன்பாட்டில் தடை செய்ததன் மூலம் - பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்ததன் வாயிலாக - இந்த சமதரப்பு நிலைப்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படுத்தியிருக்கிறது ஐரோப்பிய ஒன்றியம்.

புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் சுட்டிக்காட்டியமை போன்று இந்தத் தடை அமைதி முயற்சிகளில் தமிழர்களின் சமதரப்பு அந்தஸ்தையும், அதன் மூலம் வலுவையும் வெகுவாகப் பாதித்து நிற்கின்றது.

ஆகவே, இந்தப் பாதிப்பிலிருந்து மீளுகின்ற - மீட்சி பெறுகின்ற - முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் விரைந்து எடுக்க வேண்டிய தேவைப்பாடு தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

அதற்காக இந்த ஒஸ்லோ சந்திப்பைப் புலிகளின் பிரதிநிதிகள் பயன்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த நோக்கம் கருதித்தான் ஒஸ்லோ கலந்துரையாடல்களின்போது புலிகளின் பிரதிநிதிகள் இறுக்கமாகவும், கடுமையாகவும், உறுதியாகவும் சில விடயங்களில் நிற்பார்கள் என உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

கடற்போக்குவரத்து விவகாரமாகட்டும், புரிந்துணர்வு ஒப்பந்த விதிகளுக்கு அமைய வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகப் பிரதேசத்துக்குக் கட்டுப்பாடில்லா பொருள் விநியோகத்தை உறுதிப்படுத்துவது பற்றிய விடயமாகட்டும், கண்காணிப்புக் குழு உறுப்பினர்களின் செயற்பாடுகள் பற்றிய அம்சங்களாகட்டும் - இவை ஒவ்வொன்றிலும் அரசுத் தரப்புடன் தமிழர் தரப்பும் சம அந்தஸ்துடையது என்பதை அடித்து, வலியுறுத்திக் கூறுவது போன்றதாக புலிகளின் நிலைப்பாடு ஒஸ்லோ சந்திப்புகளின் போது அமைந்திருக்கும் எனத் தெரிகின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது தடைவிதித்துள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய நாடுகளின் உறுப்பினர்கள் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளாகத் தொடர்ந்து பணியாற்ற முடியுமா என்ற விவகாரத்தைக் கூட, அதனால் அமைதிச் செயற்பாடுகளில் தமிழர் தரப்பின் அந்தஸ்துப் பாதிப்பின் அடிப்படையிலேயே புலிகளின் பிரதிநிதிகள் அணுகுவர் என்றும் தெரிகின்றது.

புலிகளைத் தடைசெய்து, அவர்களின் சமதரப்பு அந்தஸ்துக்குப் பங்கம் ஏற்படுத்தும் நாடுகளின் பிரதிநிதிகள் நடுநிலையுடன் கூடிய கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுவது நியாயமா என்ற கேள்வியை மேற்படித் தடை வருவதற்கு முன்னரே இப்பத்தியில் எழுப்பியிருந்தோம். நமது கேள்வி எழுப்பப்பட்ட அதே அடிப்படையில்தான் புலிகள் ஒஸ்லோ சந்திப்பில் இந்த விடயத்தை ஆராய - அணுக - போகின்றார்கள் என்று தெரியவந்திருக்கின்றது.

ஒட்டுமொத்தத்தில் அமைதி முயற்சிகளில் தமிழர்களின் சமதரப்பு அந்தஸ்தை தூக்கி நிறுத்தி உறுதிப்படுத்துவதாக ஒஸ்லோ சந்திப்பு இடம்பெறப் போகின்றது. அந்த நிலைப்பாட்டை ஏற்று அங்கீகரித்துச் செயற்பட இலங்கை அரசுத் தரப்பு ஒஸ்லோவில் இணங்கி, அதன்படி செயற்படுமானால் ஒஸ்லோ சந்திப்பு வெற்றி பெறும். அல்லது வீண் விரயமாகும்.



தற்காப்புப் பயிற்சியின் நிறைவு நிகழ்வை தளபதிகள், புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பார்வையிடுவதையும், பொங்குதமிழ் பிரகடனம் வாசிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# புதுக்குடியிருப்பில் எழுச்சி பூர்வமாக நடந்த தற்காப்புப் பயிற்சியின் நிறைவு நிகழ்வு

புதுக்குடியிருப்பு,ஜூன்6

பத்தாயிரம் பேர்வரை பங்குகொண்ட தற்காப்புப் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்றுமுன்தினம்புதுக்குடியிருப்பில் எழுச்சி பூர்வமாக இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச ரீதியாக நடத்தப்பட்ட தற்காப்புப் பயிற்சியில் பங்குகொண்டவர்களே இந்த தற்காப்பு பயிற்சி நிறைவில் பங்கேற்றனர்.

தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு உந்துசக்தியாக விளங்கும் மக்கள் சக்தியின் வெளிப்பாடாக இந்த நிகழ்வு எழுச்சியுடன் நடைபெற்றதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆண்கள், பெண்கள் என கிராம மட்டத்தில் தற்காப்புப் பயிற்சியினைப் பெற்ற இவர்களுக்கு பயிற்சியின் நிறைவு நிகழ்வாக இது நடைபெற்றது.

புதுக்குடியிருப்பை அண்மித்த பகுதியில் இருந்து அணிவகுத்து வந்த இவர்கள் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு அரங்கில் ஒன்று கூடினர். இந்த நிகழ்வின் போது பயிற்சியாளர்களால் எடுக்கப்பட்ட உறுதி உரையினை அடுத்து தமது தற்காப்பு பயிற்சியினை நிகழ்வுக்கு வருகை தந்திருந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளுக்கு தமது பயிற்சி மாதிரியினை செய்து காட்டினர்.

இதனை தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, தளபதி ரமேஸ் உட்பட்டோர் ஏற்றுக்கொண்டனர்.இதன் போது அங்கு இடம்பெற்ற அரங்க செயற்பாடுகள் நிகழ்வுக்கு எழுச்சியூட்டின.

எமது விடுதலையை நாமே வென்றெடுக்க வேண்டும் என்றும் எமது நிலம் எமக்கு வேண்டும் என்றும் நிகழ்வில் உணர்வு எழுச்சியுடன் கோசம் எழுப்பி உணர்வு பூர்வமாக உணர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் தமிழீழ தேசியக் கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்.

(353)

# தனியார்துறை ஊழியர்களுக்கும் மாதாந்தம் வரவு - செலவுத்திட்டக் கொடுப்பனவாக ரூ.ஆயிரம்

## வழங்கப்படவேண்டும் என்று அரசு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்6

தனியார்துறை ஊழியர்களுக்கும் மாதாந்தம் ஆயிரம் ரூபாவை வரவு -செலவுத் திட்டக் கொடுப்பனவாக வழங்க வேண்டும் என அரசு அறிவித்துள்ளது.

தனியார் துறையில் மாதம் 20 ஆயிரம் ரூபாவுக்கு குறைவாக சம்பளம் பெறும் ஊழியர்களுக்கே இந்த நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்றும் -அறிவிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டின்36 ஆம் இலக்க வேலையாளர்களின் வரவு - செலவுத் திட்ட நிவாரணப்படி சட்டமூலம் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து குறிப்பிட்ட சம்பளம் பெறும் ஒவ்வொரு ஊழியரும் மாதாந்த நிவாரணம் பெறத் தகுதியுடையவர்கள் எனவும் -

அவர்களுக்குரிய நிவாரணத்தை தனியார்துறைகள் வழங்க வேண்டும் எனவும் அரசு அறிவித்துள்ளது.

மாதாந்தம் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு ரூபா ஆயிரமும் நாளாந்தம் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு நாள் ஒன்றுக்கு 40 ரூபாவும் (உச்ச வரம்பு ஆயிரம் ரூபா) துண்டு வீதச் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு சம்பளத்தின் 10 வீதமும் (உச்ச வரம்பு ஆயிரம்) கொடுப்பனவாக வழங்கப்படும்.

இவ்வாறான ஊழியர்களுக்கு நிவாரணத் தொகையை - சம்பள உயர்வை வழங்கத்தவறும் தொழில் தருநர்கள் மீது வழக்குத் தொடரப்படும் எனவும் -

தண்டப்பணமாக 10 ஆயிரம் அபராதம் அல்லது 6 மாத காலச் சிறைத்தண்டனை அல்லது இரண்டுக்கும் உள்ளாக்கப்படுவர் எனவும் யாழ். மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் எஸ்.முத்துக்குமாரசுவாமி தெரிவித்தார்.

(202)

# மரியன்னை பேராலயத்தில் முதல் நன்மைச் சடங்கு

குருநகர்,ஜூன்6

யாழ். மரியன்னை பேராலயத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை முதல் நன்மை வழங்கும் சடங்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு அன்று காலை 6 மணி தொடக்கம் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் நிறைவேற்றி வைக்கப்படும்.

சுமார் 180 சிறார்களுக்கு இத் தேவ திரவிய அனுமானம் வழங்கப்படும் எனவும் -

இவர்களுக்கான ஆயத்த வகுப்புகள் கடந்த ஒரு மாதகாலமாக யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடத்தப்பட்டு வருவதாகவும் - யாழ். மரியன்னை பேராலயத்தின் உதவிப் பங்குத் தந்தை தெரிவித்தார்.

(51)

# திடீரென அமுலாகும் மின்வெட்டினால் மருந்து விநியோகப் பிரிவில் நெருக்கடி

குருநகர்,ஜூன்6

குடாநாட்டில் திடீரென நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் மின்வெட்டுக் காரணமாக யாழ். பண்ணையில் இயங்கிவரும் யாழ். பிராந்திய மருந்து விநியோகப் பகுதியில் பயன்படுத்தும் குளிர்சாதனப் பெட்டிகளை சீரான முறையில் இயக்கமுடியாத நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின்வெட்டு நேரங்களில் குறிப்பிட்ட குளிர்சாதனப் பெட்டிகளுக்கு மின்சாரம் வழங்கமுடியாதிருப்பதாக யாழ். பிரதி மாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கி வரும் வைத்திய நிறுவனங்களுக்குரிய மருந்துகள், தடுப்பூசிகள் தடுப்பு மருந்துகள் யாவும் இந்தக் களஞ்சியத்திலேயே களஞ்சியப்படுத்தப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

எனவே, இங்கு வைக்கப்பட்டுள்ள மருந்துகள் மற்றும் தடுப்பு மருந்துகளை மின்வெட்டு நேரங்களில் பழுதடையாமல் பேணுவதற்காக யுனிசெப் உதவியுடன் மின் பிறப்பாக்கிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(51)

# வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் காணியற்ற குடும்பங்களுக்கு காணி வழங்க ஏற்பாடு

வடமராட்சி,ஜூன்6

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேசத்தில் வசிக்கும் காணியற்ற குடும்பங்களுக்கு குடியிப்புக் காணிகளை வழங்கும் நடவடிக்கை தொடந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடியிருப்புக் காணியற்றோருக்கு ஆனைவிழுந்தான் பகுதியிலுள்ள முடிக்குரிய காணிகளில் காணிகளைப் பகிர்தளிக்கப் பிரதேச செயலகம் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

இதற்கென காணியற்றோரின் விண்ணப்பங்கள் தொடர்ந்து பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இதே பிரதேசத்தில் காணியற்ற அரச ஊழியர்களுக்கு காணி வழங்குவதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டு 200 பேருக்கு மேற்பட்டோரின் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

காணியற்றோருக்கு குடியிருப்புக் காணிகள் வழங்கப்பட்ட பின்னரே அரச ஊழியர்களுக்கான காணி பங்கீடு தொடர்பான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு காணி வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(173)

# பின்தங்கிய பிரதேச ஆஸ்பத்திரிகளுக்கு பணிப்பாளர் பாராட்டு

குருநகர்,ஜூன்6

பின்தங்கிய பிரதேசங்களில் இயங்கி வரும் வைத்திய நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் தத்தமது வைத்திய நிறுவனங்களைத் துப்புரவாகவும் அழகாகவும் பேணி வருகின்றார்கள் என யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் பாராட்டுத் தெரிவித்தார்.

குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களில் இயங்கி வரும் மருதங்கேணி, நெடுந்தீவு வைத்தியசாலைகள் சிறப்பான நிலையில் இயங்கி வருவதாகவும் -

மேற்படி வைத்தியசாலைகளைப் பின்பற்றி ஏனைய வைத்தியசாலை நிறுவனங்களையும் பேணிப்பாதுகாக்க நிறுவனங்களில்கடமைபுரிபவர்கள் ஒ[illegible]துழைப்பு வழங்கவேண்டும் என்று[illegible] அவர் மேலும் தெரிவித்தார்.

(51)

## நாளை

வைகாசி - 24

புதன்கிழமை

07.06.2006

திதி : ஏகாதசி

முன்னிரவு : 11.07

நட்சத்திரம் : சித்திரை

பின்னிரவு : 02.45

சுபநேரம் :04.22-05.52

ராகுகாலம் : 11.52-01.22

## உதயவாக்கு

நல்ல செயல்களுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். ஆனால், [illegible] கடந்துதான் கிடைக்கும்.

-காவ்ரீவ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட மாட்டாது

## பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

சிங்கப்பூர், ஜூன்6

இலங்கை இனப்பிரச்சினையில் இராணுவ ரீதியிலோ அல்லது அரசியல் ரீதியிலோ இந்தியா எக்காரணம் கொண்டும் நேடியாகத் தலையிடாது - இவ்வாறு தெரிவித்தார். இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி. சிங்கப்பூரில் நடைபெற்ற 23 நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் கலந்துகொண்ட பாதுகாப்பு உயர்மட்ட மாநாட்டின் நிறைவில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தனது முழுமையான ஆதரவை வழங்கும் ஆயினும் தற்போதைய நிலையில்இந்தியா தலையிட்டு இலங்கையின் நிலைமையை மேலும் சிக்கலாக்க விரும்பவில்லை. இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா தலையிடாமல் இருப்பதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் உள்ளன. அதாவது இனரீதியானதும் இலங்கை அமைந்துள்ள சூழலுமே காரணங்களாகும். இந்தியா இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டால் பிரச்சினை தீர்க்கப்படுவதற்குப் பதிலாக மேலும் சிக்கலடையும் என இந்தியா நம்புகிறது. எனவே, இந்தியா சமாதான முயற்சிகளில் தலையிடாமல் அதற்குத் தனது ஆதரவை முழுமையாக வழங்கும் - என்றார். (12)

# மட்டக்களப்பில் சனியிரவு நால்வர் சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை இரவு வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் நால்வர் கொல்லப்பட்டனர்.

வாழைச்சேனை பஸ் நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அன்றைதினம் இரவு 7.10 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில்வாழைச்சேனைஇலங்கை போக்குவரத்துச்சபை டிப்போ காவலாளியான வைத்தியலிங்கம் சுஜிதரன் (வயது-26) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சிதம்பரம் கோகுலன் (வயது-20) என்பவர் படுகாயமடைந்தார்.

இரவு 9.15 மணியளவில் களுவன்கேணி இராணுவ முகாமுக்குள் பிரவேசிக்க முற்பட்டார் என்று கூறப்படும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

களுவன்கேணி மாரியம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான இராஜேந்திரன் கமலதாஸன் (வயது-22) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் களுவன்கேணி இராணுவ முகாமுக்குள் இரவு 9.15 மணியளவில் கைக்குண்டு ஒன்றுடன் நுழைய முற்பட்டார் என்றும் - அப்போது காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் இவரை சுட்டுக் கொன்றனர் என்றும் பொலீஸார் கூறினர்.

கொலையுண்டவரின் சடலம் செங்கலடி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை - இந்த இளைஞர் மதுபோதையிலேயே படைமுகாமுக்குள் நுழைய முயன்றார் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை -

வாழைச்சேனை பொலீஸ் நிலையத்துக்குச் சமீபமாக சனி இரவு 10.15 மணியளவில் இருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். விமலேந்திரன் (வயது-34), சித்திரவேல் (வயது-38) ஆகிய இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களில் விமலேந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேசசபை வேட்பாளர் என்று தெரிவிக்கப்பட்டது. தமது வீடு நோக்கி வீதியால் சென்று கொண்டிருந்த இவர்கள் இருவரையும் சுட்டு விட்டு கொலையாளிகள் தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

# வலி.தென்மேற்கில் விதை வெங்காயத்துக்கு பலத்த தட்டுப்பாடு; விவசாயிகள் பெரும் சிரமம்!

வலி.தென்மேற்கு, ஜூன்6

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் விதை வெங்காயத்திற்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது பிரதேசத்திலுள்ள விவசாயிகளில் பலர் வைகாசி போக வெங்காயம் நடுகையை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த தைப் போக வெங்காயச் செய்கையின் அறுவடையின் போது ஏற்பட்ட பெருமழையினால் வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டதால் போதுமான அளவு விதை வெங்காயத்தைசேமித்து வைக்க விவசாயிகளால் முடியாதுபோய் விட்டது.

இதனால் வைகாசி போக வெங்காய நடுகைக்கு தேவையான விதை வெங்காயத்திற்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. விதை வெங்காயத்தின் விலையும் மிகவும் அதிகரித்துள்ளது. 50 கிலோ நிறையுள்ள ஒரு அந்தர் விதை வெங்காயம் தற்போது இரண்டாயிரத்து 500 ரூபா முதல் இரண்டாயிரத்து 750 ரூபா வரை தரத்தை பொறுத்து விற்கப்படுகின்றது. (135)

# காவலரண் மீது கைக்குண்டு வீச்சு 2 பொலீஸார், சிப்பாய் படுகாயம்!

## மன்னாரில் சனியன்று சம்பவம்

மன்னார் பொது விளையாட்டரங்குச் சந்தியில் அமைந்துள்ள படையினரின் காவலரண் மீது கடந்த சனி இரவு நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சில் இரண்டு பொலீஸாரும், இராணுவச் சிப்பாயொருவரும் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதலையடுத்து படையினர் அப்பகுதியில் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் பொதுமகன் ஒருவர் பலியானார்.

சனி இரவு 7 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ரட்ணாயக்க (வயது -32), சில்வா (வயது-36) ஆகிய இரு பொலீஸாரும், உபாலி ஜெனற் (வயது-42) என்ற படைச் சிப்பாயுமே படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

படையினரின் சூட்டுக்கு இலக்காகி உப்புக்குளத்தைச் சேர்ந்த உஷைன் என்பவர் அந்த இடத்திலேயே பலியானார். இவர் மூடை தூக்கும் தொழிலாளி என்று கூறப்பட்டது. இவரது சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. படுகாயமடைந்த பொலீஸாரும், படைச்சிப்பாயும் அநுராதபுரம் இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (க)

# புலிகளுடன் நோர்வே அரசு தொடர்ந்தும் உறவு பேணும்

## அந்த நாட்டு பிரதமர் தெரிவிப்பு

இலங்கையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் நோர்வே அனுசரணையாளர்கள் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருப்பார்களென்று நோர்வேப் பிரதமர் ஜென்ஸ் ஸ்ரோல்ட்ரன் பேர்க் தெரிவித்திருக்கிறார்.

சுவிற்ஸர்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் ஜெனீவாவில் வைத்து இலங்கை விவகாரம் குறித்து செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோது, இலங்கையில் அமைதிப்பேச்சுகள் கடந்த மூன்று மாத காலமாக ஸ்தம்பித்திருப்பது ஏமாற்றத்தையும் கவலையையும் தருவதாகக் கூறியிருக்கின்றார்.

அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் விடயத்தில் அனுசரணையாளர்கள் என்ற ரீதியில் விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்தும் தொடர்புகளை நோர்வே வைத்திருக்குமென்று குறிப்பிட்ட நோர்வேப் பிரதமர், இலங்கையில் இருதரப்பையும் பேச்சுமேசைக்கு கொண்டு வருவதற்கு அனுசரணையாளர்கள் தொடர்ந்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் என்றும் கூறினார். (ம)

## சங்காபிஷேகம்

வண்.வடமேற்கு ஐயனார் ஆலயத்தில் இன்று செவ்வாய்க் கிழமை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து ஐயப்பன் சுவாமிகள் வீதியுலா வருவார் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் இடம் பெறும்.

## தொல்.விக்கினேஸ்வர மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூன்6

தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் வகுப்புகள் யாவும் நாளை புதன்கிழமைதொடக்கம் ஆரம்பமாகும். சகலமாணவர்களையும் வகுப்புகளுக்குச் சமுகமளிக்கு [illegible] (...)

## கல்விச்சாலைக் காட்சிகள்



பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி பாடசாலை அதிபர் திருமதி ஜே.ஏச்.பி பியன்வெனு தலைமையில் அண்மையில் நடைபெற்றது நிகழ்வில் இடம்பெற்ற உடற்பயிற்சிக் கண்காட்சியை படத்தில் காணலாம். *(படம்:- வலி.தென்மேற்கு செய்தியாளர்.)*



நீர்வேலி றோ.க.த. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் அதிபர் க.அருமைத்துரை வீராங்கனை ஒருவருக்கு கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: நீர்வேலிச் செய்தியாளர்)*



சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டவர்களை இந்துஆரம்ப பாடசாலை அதிபர் வ.கையிலேஸ்வரன் மைதானத்திற்கு அழைத்து வருவதைப் படத்தில் காணலாம். *(படம்: சாவகச்சேரிச் செய்தியாளர்)*



புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப்போட்டிகள்அண்மையில் நடைபெற்றது நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்களின் உடற்பயிற்சி கண்காட்சியையும் படங்களில் காணலாம். அதிபர் எஸ். கே. சண்முகலிங்கம் பட ல் காணப்படுகிறார். *(படம்: புங்குடுதீவுச் செய்தியாளர்)*



நெல்லியடி மத்திய மகா வித்தியாலய உயர்வகுப்பு மாணவர்களின் ஒன்றுகூடல்நிகழ்வின்போது நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் எம்.நடராசசுந்தரத்தின் பாரியார் மங்கள விளக்கேற்றி ஒன்றுகூடலை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பேராசிரியர் எம். நடராசசுந்தரம் வித்தியாலய அதிபர் எஸ். சேதுராஜாவும்காணப்படுகின்றனர். *(படம்: கரவெட்டிச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றே அஞ்சாத பிரபாகரன் இன்று அஞ்சிவிடுவாரா என்ன?

"இதோ, ஐரோப்பிய ஒன்றியமும் விடுதலைப் புலிகளைத் தடை செய்து விட்டதே! பிரபாகரன் இனி என்ன செய்யப் போகிறார்?"

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான அண்மைய ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை குறித்துப்பேசிக்கொள்ளும் மக்களிடையில் தலைதூக்கும் சந்தேகம் கலந்த கேள்விக்கணையே இது.

1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியன்று சென்னையில் இயங்கிய விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் தங்கியிருந்த பிரபாகரனுக்குப் புத்தாண்டு வாழ்த்துத் தெரிவிக்கச் சென்ற தமிழரொருவர், இதே வகையான கேள்வியை பிரபாகரனிடம் நேரிலேயே கேட்டுவிட்டார்.

அந்தக் கேள்வியும் அந்தக் கேள்விக்கு பிரபாகரன் அளித்த பதிலும் 'தூரநோக்குச் சிந்தனையின் உள்ளார்த்தம்' என்ற நூலின் 211 ஆவது பக்கத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"தமிழ் நாட்டின் சென்னை நகரில் இயங்கிவந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் அலுவலகத்தில் 1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி கூட்டமொன்று இடம்பெற்றது. வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் சிலர் பிரபாகரனுக்குப் புத்தாண்டு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக அங்கு கூடியிருந்தனர். பிரபாகரனுக்கு ஒரு புறத்தில் அமர்ந்திருந்த அவர்களிலொருவர் பிரபாகரனைப் பார்த்து - தம்பி! ஏனைய தமிழ்க் குழுக்கள் யாவும் உமக்கு எதிராகச் செயற்படுகின்றன. அதேசமயம் நீர் இலங்கை அரசுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கிறீர், ஒரு சந்தர்ப்பத்தில் இந்திய அரசும் உமக்கு எதிராகச் செயற்பட நேர்கிறது என ஒரு பேச்சுக்கு வைத்துக் கொண்டால், அத்தகையதொரு நிலையில் உம்மால் என்ன செய்ய இயலும்? - எனக் கேட்டார்.

"தன்னை விட வயதில் மூத்த அந்த மனிதரின் தோளில் தட்டிக் கொடுத்த பிரபாகரன், - அண்ணை! அப்படியொரு சந்தர்ப்பம் ஏற்பட்டால், எனது கைத்துப்பாக்கி மௌனித்துவிடும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? என்று தன்னம்பிக்கை தொனிக்கும் குரலில் பதிலளித்தார்." என்று அந்தப் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது

> "முழு உலக நாடுகளுமே விடுதலைப் புலிகளைத் தடைசெய்தாலும்கூட எதுவுமே பெரிதாக மாற்றம் ஏற்பட்டு விடப்போவதில்லை. நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டுமானால் விடுதலைப் புலிகளது போக்கைத் தோற்கடிக்கத்தக்க வழிவகையொன்றினைக் கண்டு பிடித்து நடைமுறைப்படுத்த இந்த நாட்டு அரச நிர்வாகம் முயலல் அவசியமாகும்.

விதித்துள்ள தடை குறித்து எவராவது பிரபாகரனிடம் மேற்குறிப்பிட்ட விதத்தில் இன்று கேள்வி எழுப்புவார்களானால், அதற்கான பதில் கீழ்க்காணும் விதத்திலேயே அமையமுடியும். "சகோதரனே! ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள இந்தத் தடையால் யுத்தம் நிறுத்தப்பட்டுவிடும் என நீர் கருதுகிறீரா?"

"தற்கொலைக் குண்டுத் தாக்குதல் அற்றுப் போய்விடும் என நீர் கருதுகிறீரா?"

### யதார்த்தம்

உண்மையில் பிரபாகரனைத் தனிமைப்படுத்தியோ அல்லது பிரபாகரனைச் சிரமங்களுக்கு உள்ளாக்கியோ அல்லாவிடில் பிரபாகரன் மீது அழுத்தங்களை மேற்கொண்டோ பிரபாகரனைப் பணிய வைத்துவிட இயலாது என்பதே யதார்த்தமாகும்.

இந்த யதார்த்தத்தை முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நன்றாக உணர்ந்திருந்தார். இலங்கை அரசுடன் பேச்சுகளை மேற்கொள்ளுமாறு இந்திய உளவுப் பிரிவான 'றோ' அமைப்பினூடாக பிரபாகரன் மீது தாம் மேற்கொண்ட அழுத்தங்களால் எந்தவித பயனும் கிட்டவில்லை என்பதை உணர்ந்து கொண்ட ராஜீவ்காந்தி ஒருதடவை "அந்த மனிதன் கடும் பிடிவாதக்காரனாகவல்லவா இருக்கிறான்?" எனப் பிரபாகரன் குறித்து விமர்சித்திருந்தார்.

அது ராஜீவ்காந்தியின் கருத்து. ஆனால், இந்திய உளவுப் பிரிவான ஆய்வு பகுப்பாய்வுப் பிரிவு (றோ - Raw) அமைப்பு தனது முயற்சியைக் கைவிட்டுவிடவில்லை.

இலங்கை அரசுடனான சமாதானப் பேச்சுகள் தொடர்பாக பிரபாகரன் தனது இணக்கப்பாடற்ற இறுக்கமான கொள்கையைக் கைவிடாது விட்டால், இந்தியாவில் தஞ்சம் புகுந்து தங்கியிருப்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசு வழங்கியுள்ள சலுகையை நிறுத்திக் கொள்ள நேருமென 'றோ' அமைப்பு மேற்கொண்ட மிரட்டலே விசேடமாக பிரபாகரனுக்குக் கடும் கோபத்தை ஏற்படுத்தியது. அத்தகைய மிரட்டலால் இயற்கைக்கு மாறாக, சந்தர்ப்ப சூழ்நிலை குறித்து ஆழ்ந்து சிந்திக்காமல் தமக்கு ஏற்பட்ட முற்கோபத்தால் பிரபாகரன் கடும் தொனியில் கருத்து வெளியிடத் தலைப்பட்டார். " நான் இந்தியாவை விட்டு வெளியேறிச் செல்வதற்கு முன் நிச்சயமாக இந்தியாவுக்கு நல்ல பாடமொன்று கற்பித்தேயாவேன்" எனப் பிரபாகரன் தனக்கு நெருக்கமான சில தமிழர்களிடம் கடும் தொனியில் தெரிவித்திருந்தார்.

தாம் கூறியபடியே பிரபாகரன் ஒன்றல்ல, இரு தடவைகள் இந்தியாவுக்குப் பாடம் புகட்டத் தவறவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பித்தமை இந்தியாவுக்குப் பிரபாகரன் புகட்டிய முதல் பாடமாகும்.

இந்தியாவின் பிரதமராகவிருந்த ராஜீவ்காந்தியைப் படுகொலை செய்தமையே இந்தியாவுக்குப் பிரபாகரன் புகட்டிய இரண்டாவது பாடமாகும்.

அப்படியானால், ஐரோப்பிய ஒன்றியம் கூடத் தற்போது விடுதலைப் புலிகளைத் தடை செய்துள்ளதே?

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்ததன் அடிப்படை நோக்கமே விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுக்கு வரச் செய்யும் உத்தியேயாகும்.

### சொல்ஹெய்மின் முயற்சி

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்ய ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசித்து வருவதாக விடுதலைப் புலிகளது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்குத் தெரிவித்த நோர்வேயின் சமாதான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், தாம் பிரபாகரனை நேரில் சந்தித்துப் பேச வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொண்டதற்கான அடிப்படைக் காரணம் இதுவேயாகும்.

இதன் மூலம் ஐரோப்பிய ஒன்றி யம் விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதற்கு முன்னர் பிரபகரனுக்கு மற்றுமொரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்குத் தாம் தயாராக இருக்கிறார் என எரிக் சொல்ஹெய்ம் சொல்லாமல் சொல்லி யிருந்தார்.

"விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதானப் பேச்சுகளில் கலந்துகொள்ள உடன்படுவார்களேயானால், ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது விதிக்க உத் தேசித்துள்ள தடை முயற்சியைத் தம்மால் தடுத்து நிறுத்தமுடியும் எனப் பிரபாகரனிடம் தெரிவிக்கும் எண்ணத்துடனேயே எரிக்சொல்ஹெய்ம் அத்தகைய சந்திப்பொன்றை ஏற்படுத்திக் கொள்ள முயன்றார்.

ஆனால், எரிக்சொல்ஹெய்ம் எதற்காகத் தன்னைச் சந்திக்க முயல்கிறார் என்பதைப் பிரபாகரன் முன் கூட்டியே ஊகித்து அறிந்திருந்தார். நோர்வேயின் விசேட சமாதானப் பிரதிநிதியை அவர் நேரில் சந்திப்பதற்கு மறுப்புத் தெரிவித்ததன் இரகசியம் இதுவேயாகும்.

"என்னைப் பயமுறுத்தி என்னை முடக்கிவிடுவதற்கு எவரும் முயலவேண்டாம். இத்தகைய பயமுறுத்தல் எதனையும் நான் பொருட்படுத்தப் போவதில்லை." எரிக் சொல்ஹெய்மைச் சந்திக்க மறுத்ததன் மூலம் பிரபாகரன் வெளியிட்ட கருத்தே இதுவாகும்.

பிரபாகரன் குண்டுத் தாக்குதலை சகித்துக் கொள்வார்; துப்பாக்கிப் பிரயோகத்தைச் சகித்துக் கொள்வார்; ஏவுகணைத் தாக்குதலையோ அல்லது வேறெந்த ஆயுதத் தாக்குதலையோ சகித்துக் கொள்வார். ஆனால், தம்மீது அழுத்தம் மேற்கொள்ளப்படுவதை எந்த வகையிலும் அவரால் சகித்துக் கொள்ள இயலாது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானதையடுத்து, இலங்கை அரசுடன் சமாதானப் பேச்சுகளை மேற்கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு பிரபாகரன் மீது இந்திய அரசு மேற்கொண்ட அழுத்தம் எந்த அளவுக்குப் பிரபாகரனுக்கு வெறுப்பை ஏற்படுத்தியதோ, அந்த அளவுக்கு பிரபாகரனுக்கு சர்வதேச வலைப்பின்னல் வெறுப்பை ஏற்படுத்தியது.

### சர்வதேச வலைப்பின்னல்

ரணில் விக்கிரமசிங்க மீது பிரபாகரனுக்கு வெறுப்பை ஏற்படுத்தக் காரணமாய் அமைந்ததும், அவர் கபடத்தனமாகப் பின்னி வைத்த இந்த சர்வதேச வலைப்பின்னலேயாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ரணில் இந்த நாட்டின் பிரதமர் பதவியை ஏற்றதன் மூலம் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டின் பின்னரே, சமாதானத்தை உருவாக்கும் நோக்கில் இத்தகைய சர்வதேச வலைப்பின்னலொன்றை உருவாக்கும் திட்டம் அவரால் முன்னெடுக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசு, பிரபாகரனின் ஆயுதக் கப்பல்களைத் தாக்கியழித்த வண்ணமே இந்தச் சர்வதேச வலைப்பின்னலூடாக விடுதலைப் புலிகளைப் பேச்சுகளில் கலந்து கொள்வதற்கான அழுத்தங்களையும் மேற்கொண்டு வந்தது. அதன் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்க மீதும் அவரது செயற்பாடுகள் மீதும் விடுதலைப் புலிகளுக்கு அதிருப்தி உருவாகியது.

நாட்டில் சமாதானத்தை உருவாக்குவது என்ற போர்வையில் விடுதலைப் புலிகள் மீது சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கும் ஒரு பின்னணியை உருவாக்கிய ரணிலைப் பழிக்குப் பழி வாங்குவதற்கான சந்தர்ப்பமொன்றை விடுதலைப் புலிகள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

இத்தகைய பின்னணியைக் கருத்தில் கொண்டே பிரபாகரன் சமாதானப் பேச்சுகளில் ஈடுபடுவதற்கும், டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்கும் மறுப்புத் தெரிவித்தார்.

பிரபாகரனைச் சமாதானப் பேச்சுகளில் கலந்துகொள்ள வைப்பதற்கும், டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளச் செய்யவும் சர்வதேச வலைப்பின்னலூடாக ரணிலின் அரசு அழுத்தம் மேற்கொண்ட அதேவேளையில், பிரபாகரனும் அன்புடன் பாலசிங்கமும் இணைந்து சர்வதேச வலைப்பின்னலுக்குத் தாம் ஒரு போதும் அஞ்சப் போவதில்லை எனத் தெரிவித்து, சர்வதேச வலைப்பின்னல் மீது சகித்துக் கொள்ள இயலாத அளவுக்கு கண்டனக் கணைகளையும் தொடுத்தனர்.

2005 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரபாகரன் தோல்வியடையச் செய்தமைக்கான காரணம், ரணில் கபடத்தனமாக உருவாக்கி வைத்த இந்த சர்வதேச வலைப்பின்னலேயாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடித்து மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிபெற வைப்பதன் மூலம் சர்வதேச வலைப்பின்னலைத் தமது எ களில் எடுத்துக் கொள்ள இயலுமெனப் பிரபாகரன் நம்பினார்.

ஆனால், ஜனாதிபதிப் பதவியை வென்றெடுத்த மஹிந்த ராஜபக்ஷ பிரபாகரனின் எதிர்பார்ப்புக்கு மாறாக அதே சர்வதேச வலைப்பின்னலைப் பயன்படுத்திப் பிரபாகரனைச் சமாதானப் பேச்சுகளில் கலந்து கொள்வதற்கான நிலையை உருவாக்க முயன்று வருகிறார்.

இத்தகைய விதத்திலேயே, ஐரோப்பிய ஒன்றியத்தினூடாக விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்யும் தமது திட்டத்தின் மூலம் பிரபாகரனைத் தம்வசப் படுத்த எரிக் சொல்ஹெய்ம் முயன்றார்.

ஆனால், அவர்கள் எண்ணும் விதத்தில் இது இலேசானதொரு விடயமல்ல.

விடுதலைப் புலிகள் மீது தடை என்ற வாக்கியம் பிரபாகரனைப் பொறுத்தவரையில் புதியதானதொரு செய்தியல்ல.

எந்தவொரு வெளிநாடும் சரி, விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்த வேளையில் பிரபாகரன் முல்லைத்தீவுப் பகுதியில் பதுங்கு குழியொன்றுக்குள் சுருண்டு முடங்கிப் படுத்துக் கொண்டதில்லை.

பூனைக்குட்டிபோன்று இலங்கை அரசின் கால்களுக்கருகில் அடங்கி, ஒடுங்கிப் போனதில்லை.

தமது விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது தடை விதிக்கப்படும் வேளைகளிலெல்லாம் அதற்கான பிரபாகரனின் எதிர் நடவடிக்கை எவ்வாறு அமைந்தன என்பதற்கு வரலாறு சாட்சி பகரும்.

### எதிர்விளைவுகள்

1991 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்ததையடுத்து இந்திய அரசு விடுதலைப் புலிகள் மீது தடைவிதித்தது. அந்தவேளையில் பதவியிலிருந்த பிரேம



தாஸ அரசு அந்தத் தடையால் தாம் புலிகளை யுத்தத்தில் தோற்கடித்து விட்டதாகக் கூறிக் கைகொட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

மிகச் சொற்ப காலத்துக்குள்ளேயே பிரேமதாஸ அரசு அதற்கான பயனை அனுபவிக்க நேர்ந்தது. நாட்டின் திறமைமிக்க ராணுவ அதிகாரிகளான டென்சில் கொப்பேகடுவ மற்றும் விஜய விமலரத்தின ஆகியோரைப் படுகொலை செய்து பிரேமதாஸ அரசைத் திகைக்க வைத்தனர் புலிகள். கடற்படைத் தளபதி கிளன்சியையும் நாட்டின் ஜனாதிபதி பிரேமதாஸவையும் கொழும்பு நகர வீதியில் வைத்துப் பட்டப்பகலில் படுகொலை செய்து நாட்டையே அதிர்ச்சியில் உறைய வைத்தனர். அதாவது, இந்தியா விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது தடைவிதித்து விட்டது என்பதற்காக பிரபாகரனின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நிறுத்தப்பட்டுவிடவில்லை.

இந்திய அரசு விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது தடைவிதித்து தற்போது 15 வருடங்கள் கடந்துவிட்டன. புலிகளது கைப்பொம்மை போன்ற தமிழ்நாட்டின் தமிழ்கட்சிகளின் புண்ணியத்தாலேயே இந்திய மத்திய அரசு இன்று இயங்கமுடிகிறது. இந்திய அரசுவிடுதலைப் புலிகளைத் தடைசெய்வதற்கு முன்னர் இந்தத் தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்களெல்லாம் பெறுமதியற்ற - பிரபல்யமற்ற - சாதாரண கீழ்மட்ட அரசியல்வாதிகளாகவே இருந்தனர். ஆனால், இன்று அவர்கள் மத்திய அரசின் தலைவிதியையே நிர்ணயிக்கத்தக்க பலம்பொருந்திய பிரபல்யம்

**மூலம்: உபுல் யோசெப் பெர்னாண்டோ**
**தமிழில்: வீயெஸ்ரி**

மிக்க அரசியல் தலைவர்களாக விளங்குகின்றனர்.

அமெரிக்க அரசு 1997 ஆம் ஆண்டிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை பிரகடனப்படுத்தியது. அந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் யுத்தத்தைத் தலைநகர் கொழும்புக்கே கொண்டுவந்து விட்டிருந்தனர். அமெரிக்க அரசின் தடை உத்தரவு வெளியிடப்பட்டதையடுத்து கொழும்புப் பிரதேசத்தில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் அதிகரித்தமை மட்டுமன்றி, மிக முக்கியத்துவம் மிக்க தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதலும் விடுதலைப் புலிகளால் நிகழ்த்திக் காட்டப்பட்டது.

அமெரிக்கா விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது தடை விதித்துவிட்டதே என்பதற்காக அமெரிக்காவில் வாழ்ந்து வந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களும் உறுப்பினர்களும் உயிர் தப்பினால் போதும் என்றெண்ணி அங்கிருந்து இலங்கைக்கு ஓடி வந்து விடவில்லை. தத்தமது விசிற்றிங் கார்ட்டுகளில் பொறித்திருந்த விடுதலைப் புலிகளது இலச்சினைக்குப் பதிலாக வேறு இலச்சினைகளைப் பொறித்துக் கொண்டு தாங்கள் எதற்காக அமெரிக்காவில் தங்கியிருந்தார்களோ அதற்கான வேலைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டனர். இன்றும் மேற்கொண்டு வருகின்றனர்

பிரிட்டிஷ் அரசு 2000 ஆம் ஆண்டிலேயே விடுதலைப் புலிகள்மீதான தடையைப் பிரகடனப்படுத்தியது. அந்தவேளையில் இலங்கையில் அதிகாரத்திலிருந்த சந்திரிகா அரசு பிரிட்டிஷ் அரசின் அந்தத் தடையைத் தனது பாரிய வெற்றியொன்றென நாட்டு மக்களுக்கு விளம்பரப்படுத்திக் கொண்டது. பல லட்ச ரூபா செலவில் போஸ்ரர்கள் அடித்து நாடு பூராவும் ஒட்டி விளம்பரப்படுத்தியது.

இது நடந்து அதிக காலம் செல்லுமுன்னரே விடுதலைப் புலிகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மீது அதிரடித் தாக்குதலை நிகழ்த்தி பலகோடி ரூபா பெறுமதியான இழப்புகளை ஏற்படுத்தி தாம் யார் என்பதனை அரசுக்கு வெளிப்படுத்திக் காட்டினார்கள்.

பிரிட்டன், விடுதலைப் புலிகள் ... ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுற்றுச்சூழல் தினத்தை ஒட்டி**

# கரைதுறைப்பற்று பிரதேசத்தில் மாணவர்களிடையே போட்டி

பரந்தன், ஜூன் 6

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை பாடசாலை மாணவர்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளது எனப் பிரதேச விசேட ஆணையாளர் சிகிருஷ்ணபிள்ளை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் அனைவரும் இப்போட்டிகளில் வயது வேறுபாடுகள் இன்றிப் பங்கு கொள்ளமுடியும்.

பங்குபெற விரும்பும் பாடசாலை மாணவர்கள் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையிலோ அல்லது அந்தந்தப் பகுதிகளில் உள்ள பிரதேச சபையின் உபஅலுலவலகத்திலோ பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மாணவர் ஒருவர் ஒரு கிலோ கிராம் நிறையுடைய பாவனைக்குப் பின்னான பொலித்தீனை பிரதேச சபையிடம் ஒப்படைத்தால் எழுபத்தைந்து ரூபாவும் -

பாவனைக்குப் பின்னான ஒரு கிலோ பிளாஸ்ரிக் போத்தல்களை ஒப்படைத்தால் 50 ரூபாவும் - வழங்கப்படும்.

பிரதேச சபையில் பதிவுசெய்த மாணவர்களுக்கு இவ்வாறான பொருள்களைச் சேமிப்பதற்கென கலன்களும், பைகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

அதிகமான தொகையில் இவ்வாறான பொருள்களைச் சேகரித்து ஒப்படைப்பவர்கள் மூவருக்கு முறையே மூவாயிரம், இரண்டாயிரம், ஆயிரம் ரூபா என ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (352)

# வைத்தியசாலைக்கு நிழற்பிரதி இயந்திரம்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்கு வடமராட்சி கிழக்கு மணல் சங்கத்தினரால் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான நிழல் பிரதி இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை வளமேம்பாட்டுப் பேரவையின் முன்னிலையில் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை வைத்திய அதிகாரியிடம் மணல் சங்கத்தின் பொருளாளர் இயந்திரத்தைக் கையளித்தார். (352)

# கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு இருமாடிக் கட்டடம் அமைக்க அடிக்கல்

வட்டக்கச்சி, ஜூன் 5

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் புதிய இரண்டு மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்தவாரம் நடைபெற்றது.

வித்தியாலய முதல்வர் வி. யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, தமிழீழ கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருள், கிளிநொச்சி மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் உட்பட பல பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இப்புதிய கட்டடம் 'யுனிசெவ்' நிறுவன நிதியுதவியுடன் 'யுனப்ஸ்' நிறுவனத்தால் 54 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. அடிக்கல் நாட்டும் நிகழ்வில் 'யுனிசெவ்', 'யுனப்ஸ்' நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (405)

## வாழைச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

ஒட்டுசுட்டான், ஜூன்6

தற்போது வீசும் கடும் காற்றால் வாழைச் செய்கையாளர்கள் பலத்த நஷ்டமடைந்து வருகின்றனர்.

பலத்த காற்று வீசுவதால் வாழைகள் குலைகளுடன் முறிந்து விழுவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. (341)

# கிளிநொச்சியில் பல்துறை தொழிற்பயிற்சிகள் ஆரம்பம்

பரந்தன், ஜூன் 6

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தால் தொழில் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அலுமினியம் பொருத்துதல், வீட்டுமின் இணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல் மற்றும் தொலைக்காட்சி, வானொலி, கணனி திருத்தல் ஆகிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தால் அலுமினியம் பொருத்துதல், தொலைக்காட்சி, வானொலி, கணனி திருத்துதல் போன்ற பயிற்சிநெறிகளுக்கு 75 பேரும்-

ஆனைவிழுந்தான் தொழில் பயிற்சி நிலையத்தால் நீர்க்குழாய், அலுமினியம் பொருத்தும் பயிற்சிக்கு 50 பேரும் -

தொழிற்பயிற்சி நிலையத்தில் வீட்டுமின் இணைப்பு, மரவேலை ஆகிய பயிற்சிநெறிகளுக்கு 50 பேரும் - இணைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தொழிற்பயிற்சிகள் ஆறுமாதங்கள் நடைபெறும். பயிற்சி முடிவில் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேசன், மரவேலை, வீட்டுமின் இணைப்பு ஆகியவற்றுக்கான பயிற்சி வகுப்புகளையும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும்-

சகல தொழிற் பயிற்சிகளிலும் ஆண்-பெண் இருபாலாரும் பங்குபற்றி வருகின்றனர் என்றும்- கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவக முதல்வர் சோதி முருகேசு தெரிவித்துள்ளார். (352)

# ஐ.நாவின் நிதி உதவியுடன் இரு சந்தைக் கட்டடங்கள்

பரந்தன், ஜூன் 6

பளை, பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இரு சந்தைக்கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் 16 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

இக்கட்டடங்களில் ஒன்று மாசாரிலும் மற்றையது பளை பொதுச் சந்தை வளாகத்திலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்விரு கட்டடங்களுக்குமான அடிக்கல்லை பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் சிவபூீ நட்டுவைத்தார்.

இந்த இரண்டு நிகழ்வுகளிலும் கிராம சேவகர்கள், பிரதேச சபைச் செயலர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அரசியல்துறைப் பிரதேச பொறுப்பாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (352)

# அன்றே அஞ்சாத....

(05 ஆம் பக்கம் பார்க்க)

மீது தடை விதித்து தற்போது ஆறுஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்றும் கூட விடுதலைப் புலிகளது அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் விடுதலைப் புலிகள் என்ற இலச்சினையின் அடிப்படையுடனேயே பிரிட்டிஷ் தலைநகர் லண்டனிலிருந்தவாறு சர்வதேச ஊடகவியலாளர்களுக்குப் பேட்டி வழங்கி வருகின்றார்.

கனடா மிக அண்மையிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையைப் பிரகடனப்படுத்தியிருந்தது. கனடாவின் அந்தத் தடை குறித்த உத்தியோகபூர்வ பிரகடனம் வெளியாகி நீண்ட நாள்கள் செல்லவில்லை. இலங்கையின் ராணுவத் தலைமையகத்தினுள்ளேயே ஊடுருவி இராணுவத் தளபதியை இலக்குவைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதலை புலிகள் நிகழ்த்திக் காட்டியுள்ளனர்.

தமது விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது தடை விதிக்கப்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் அதற்கான எதிர்நடவடிக்கையை பிரபாகரன் வெளிப்படுத்தும் தனிப்பாணியே இது.

இவ்விதம் தமது அமைப்பை வெளிநாடுகள் தடைசெய்த வேளைகளில் உடனுக்குடன் அவற்றுக்கான எதிர்நடவடிக்கைகளைத் தமது வழமையான பாணியில் பிரபாகரனும் வெளிப்படுத்தியுள்ளார். அப்போதெல்லாம் சம்பந்தப்பட்ட வெளிநாடுகள் எவையும் இந்த நாட்டின் சிங்கள மக்களுக்கு உதவ முன்வந்ததில்லை.

1991 ஆம் ஆண்டில் இந்தியா விடுதலைப் புலிகளைத் தடை செய்தமைக்கான எதிர் நடவடிக்கையாக விடுதலைப் புலிகள் ஜனாதிபதி பிரேமதாஸவைப் படுகொலை செய்தபோது இந்தியா எமக்கு உதவ முன்வரவேயில்லை.

அமெரிக்க அரசு விடுதலைப் புலிகளைத் தடைசெய்தமைக்கான எதிர் நடவடிக்கையாக விடுதலைப் புலிகள் தலதா மாளிகை மீது குண்டுத் தாக்குதல் மேற்கொண்ட வேளையில் அமெரிக்க அரசு கொழும்பின் பாதுகாப்புக்கு உதவுவதற்குக் கூட முன்வந்ததில்லை.

2000ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசு விடுதலைப் புலிகள் மீது தடைவிதித்த வேளையில் அதற்கான எதிர் நடவடிக்கையாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மீது தாக்குதல் மேற்கொண்ட போதும்கூட இலங்கை ஒரு பாதுகாப்பற்ற நாடு என்பதால் பிரிட்டிஷ் பிரஜைகள் அனாவசியமாக இலங்கைக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அந்நாட்டு அரசு வேண்டுகோள் விடுத்ததே தவிர தாக்கப்பட்ட கட்டுநாயக்க விமான நிலையப் பாதுகாப்புக்கு உதவ ஆர்வம் காட்டவில்லை.

விடுதலைப் புலிகள் மீது வெளிநாடுகள் விதிக்கும் தடை உண்மையில் உள்வீட்டுச் சண்டையைப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்வதை ஒத்ததாகும். உள்வீட்டுச் சண்டையைப் பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்று தீர்த்துக்கொள்ள முயல்வது உண்மையில் சச்சரவு உருவானதால் கைகளால் பரஸ்பரம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் கத்தி, வாள், பொல்லுகளால் மேற்கொள்ளப்படுமளவுக்கு தீவிர நிலை அடைவதாக அமையும். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் பொலிஸார் சச்சரவு இடம்பெற்ற வீட்டுக்கு வந்து நிரந்தரமாகத் தங்கியிருந்து சம்பந்தப்பட்ட தரப்புகளிடையேயான சச்சரவைத் தீர்த்து வைக்க முன்வரப்போவதில்லை. உண்மையில் சச்சரவில் சம்பந்தப்பட்ட வீட்டுக்காரர்களே சிரமமும் துயரமும் அடைய நேரிடுகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான வெளிநாடுகளின் தடையும் இதனையொத்ததே. உலகநாடுகள் விடுதலைப் புலிகளுக்குத் தத்தமது நாடுகளில் தடைவிதிக்கும் அதேசமயம் அத்தகைய தடைமுடிவு காரணமாக இந்த நாட்டின் பொதுமக்களே துன்பத்தையும் இழப்புகளையும் சந்திக்க நேர்கிறது.

ஆதலால், முழு உலக நாடுகளுமே விடுதலைப் புலிகளைத் தடைசெய்தாலும்கூட எதுவுமே பெரிதாக மாற்றம் ஏற்பட்டு விடப்போவதில்லை. நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கவேண்டுமானால் விடுதலைப் புலிகளது போக்கைத் தோற்கடிக்கத் தக்க வழிவகையொன்றினைக் கண்டு பிடித்து நடைமுறைப்படுத்த இந்த நாட்டு அரச நிர்வாகம் முயலல் வேண்டும். இன்று நாட்டுக்கு மிக அத்தியாவசியமான தேவையாக அமைவது இதுவேயாகும். ✱


31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
அன்னபூரணம் பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாசாலை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

அன்னை மடியில் 25-09-1918

அம்பாள் அடியில் 07-05-2006

அன்பால் அரவணைத்து அறிவால் உயிரூட்டி
பண்பால் பாரினில் உயர்ந்திட பக்கதுணையாயிருந்த
எம் அன்புத் தெய்வமே! ஆருயிர் அம்மாவே!
ஆறுதல் கூறாது அரனடிதான் சேர்ந்ததேனோ.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

07-05-2006 அன்று இறையடியெய்திய எங்கள் இதய தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு உதவிபுரிந்தவர்களுக்கும், வெளிநாட்டில் இருந்தும், உள்நாட்டிலிருந்தும் தொலைபேசி மூலமாகவும், தந்திமூலமாகவும் அஞ்சலிப் பிரசுரங்கள், மலர்வளையங்கள், மலர்மாலைகள் மூலமாகவும் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் இன்று 06-06-2006 இல் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண... கிரியைகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'பாலகிரி'
கல்லடி ஒழுங்கை,
சாவகச்சேரி. (50857)(26.11.17)

பிரிவால்வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.





ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
நாகேஸ்வரம் - அளவெட்டி

நாளை 07.06.2006 புதன்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி 9.00 மணிக்கு திரு.கா.கமலநாதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) சொற்பொழிவும் முற்பகல் 10.00 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும், தொடர்ந்து தீர்த்தம் இடம்பெறும் என்பதை அன்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

நாகேஸ்வரம் - அளவெட்டி. பொ.ப.சபை



கண்ணீர் அஞ்சலி

எமது அதிபர் திரு.S.ஞானலிங்கம் அவர்களின்
அன்புச் சகோதரி

திருமதி நவமணி இரத்தினம்

அவர்கள் இறைவனடி எய்திய செய்தி அறிந்து அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிக் கழகம்,
யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்.

(50887) (26.17.11)



பிறந்தநாள் வாழ்த்து



உருவாய் 06 06 1957

அருவாய் 16 08 2004

அமரர்
கந்தசாமிஐயர் பாலநடராஜன்

மலையே வரினும்
தலையே சும எனத்
தாங்கிக் கொண்டவனே
தளராத நெஞ்சினனே- நீ
மரணத்திலும்வாழ்வாய்
வாழிய பல்லாண்டு!

ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (50752) (39.11.17.26)

-உன்னவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ''உயர் குருதியமுக்கம்'' இறுவட்டு வெளியீட்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள். *(படங்கள்: தமிழினியன், நேசன்)*

# 'உயர்குருதியமுக்கம்' இறுவட்டு வெளியீடு கைலாசபதி கலையரங்கில் சிறப்புற நடந்தது

வலி.வடக்கு,ஜூன்6

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் 23ஆம் அணியினரால் வெளியிடப்பட்ட 'உயர் குருதியமுக்கம்' இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் முற்பகல் 10.15 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மருத்துவபீட மாணவர் ச.கஜேந்திரன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

இந்த நிகழ்வில், இறுவட்டின் முதல் பிரதியை வைத்தியக்லாநிதி சிவசுதன் வெளியிட்டுவைக்க லயன் எஸ்.சிவராஜேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து சிறப்புப்பிரதிகளைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் வெளியிட்டு வைத்தார்.

இறுவட்டின் அறிமுகவுரையினை உள வைத்திய ஆலோசகர் வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகனும் நூல் மதிப்பீட்டுரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் வைத்திய நிபுணர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(86-190)

# மானிப்பாயில் மரக்கறிப் பயிர்ச்செய்கைக்கு மண்ணெண்ணெய் வழங்கக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஜூன்6

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் தமது பிரிவில் மரக்கறி மற்றும் மேட்டுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு ஒரு பரப்புக்கு ஒரு லீற்றர் என்ற அடிப்படையில் வாராந்தம் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மரக்கறிச் செய்கையாளர்கள் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டினால் நீர் பாய்ச்ச முடியாது மிகவும் அவதிப்பட்டு வருவதாகவும்-

பங்கீட்டு அடிப்படையில் வாராந்தம் பரப்பு ஒன்றுக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் பெறுவதற்கு ஏற்பாடு செய்து தருமாறும் -

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலருக்குச் சமர்ப்பித்துள்ள கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் மண்ணெண்ணெய் தேவைப்படும் 58 விவசாயிகளின் பெயர்ப்பட்டியலும் அவர்கள் செய்கை பண்ணும் பரப்பளவும் இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து இந்த மண்ணெண்ணெயை ஒதுக்கீடு செய்து பெற்றுத் தருமாறு இந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று மேற்படி விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் சி.பொ.மா.க. முதலியார் தெரிவித்தார். உடுவில் கமநலசேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தருக்கும் இக்கடிதத்தின் பிரதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(135)

## சிமெந்து, இரும்புக் கம்பிகளுடன்

# ஓமந்தையில் தடுக்கப்பட்ட வாகனங்களை விடுவிக்கவும்

கொழும்பு,ஜூன்6

யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் கட்டடப் பணிகளுக்கு சிமெந்தும் இரும்புக் கம்பிகளும் அத்தியாவசியமாகத் தேவைப்படும் நிலையில் இவைகளை குறித்த பகுதிகளுக்குக் கொண்டு செல்வதை ஓமந்தையில் இராணுவ அதிகாரிகள் தடுத்து நிறுத்துகிறார்கள் என்று அறிய மிகவும் வேதனையாகவிருக்கிறது.

போரினாலும் ஆழிப்பேரலை அனர்த்தத்தினாலும் தகர்த்தெறியப்பட்ட கட்டடங்களை மீளக் கட்டியெழுப்புவதில் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில் இராணுவம் எடுத்துள்ள இந்த ஒருதலைப்பட்சமான திடீர் நடவடிக்கை 2002ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்று நாம் கருதுகின்றோம்.

இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறு ஓமந்தையில் கட்டட வேலைகளுக்குத் தேவையான பொருள்களுடன் தடுத்து நிறுத்தப்பட்டுள்ள சகல வாகனங்களையும் உடனடியாக விடுவிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அமைச்சுகளுக்கும் உத்தரவிடுமாறு ஜனாதிபதியை மாவை சேனாதிராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

(ப)

# பண்டத்தரிப்பு ஏழுபுளியடி வீதியை புனரமைக்கக் கோரித் தீர்மானம்

வலி.தென்மேற்கு,ஜூன்6

பலத்த சேதமடைந்த நிலையிலுள்ள பண்டத்தரிப்பு ஏழுபுளியடி விவசாய வீதியைப் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் காலபோக நெல் விதைப்புக்குத் தேவையான நல்ல இன விதை நெல்லை நேரகாலத்துடன் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் -

விவசாயிகள் வருடச் சந்தாவாக நூறு ரூபா செலுத்தவேண்டும் - ஆகிய தீர்மானங்களும் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் தொல்புரம் கமநல சேவைநிலையப் பெரும்பாக உத்தியோகத்தர்; 'கெயர்' நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

(135)

# ஆப்கான் பாதுகாப்பை நேட்டோ ஜூலையில் பொறுப்பேற்கும்

காபுல்,ஜூன்6

விரக்தியுற்றிருக்கும் ஆப்கானிஸ்தான் பொதுமக்களின் மனங்களை வென்றெடுக்கும் வகையில் அங்கு நிலைகொள்ளவிருக்கும் நேட்டோ படைகள் நடந்துகொள்ளும் என்றும் அப்படைகளின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் டேவிட் றிச்சார்ட்ஸ் கூறியிருக்கிறார்.

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியை அமெரிக்கப் படைகளின் பொறுப்பிலிருந்து நேட்டோப் படைகள் வரும் ஜூலை மாதம் பொறுப்பெடுத்துக்கொள்ளவிருக்கின்றன.

வெறுப்படைந்து போயுள்ள ஆப்கான் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் மக்களின் தோழமையான படைகளாக நேட்டோ படைகள் நடந்துகொள்ளும் என்று தளபதி றிச்சர்ட்ஸ் கூறினார்.

கடந்த வாரம் காபுலில் அமெரிக்க வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரங்களில் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டனர். அவ்வாறான கலவரங்கள் மீண்டும் ஏற்படாவண்ணம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின்போது அதிக ஆபத்துக்களை எதிர்கொண்டு சமாளிக்கப் போவதாகவும் ஜெனரல் றிச்சார்ட்ஸ் கூறினார்.

(ப)

# நிபந்தனையற்ற பேச்சுக்கு ஈரான் அமைச்சர் வரவேற்பு

நிபந்தனையற்ற பேச்சு நடத்தினால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என ஈரான் வெளியுறவு அமைச்சர் மனௌச்சர் மொட்டகி தெரிவித்தார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

ஐரோப்பிய யூனியனும் அமெரிக்காவும் தங்களுக்காக ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளன. இதிலிருந்து மீள நிபந்தனையற்ற பேச்சு உதவும். ஈரான் அணுசக்தித் திட்டங்களைக் கைவிட்டால் சலுகைகள் வழங்கப்படும் எனக் கூறியுள்ளனர். அது குறித்து விவரங்களைப் படித்துப்பார்த்த பின்னர்தான் முடிவெடுக்கமுடியும். நிபந்தனையற்ற பேச்சு என்றால்தான் நாங்கள் ஒப்புக்கொள்வோம். சர்வதேச அணுசக்தி ஆணைக்குழுவில் இடம்பெற்றுள்ள நாடுகளும் பேச்சுவார்த்தையில் பங்கேற்கலாம் - என்றார்.

# காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தால்தான் இந்தியா - பாக். இடையே நிரந்தர அமைதி ஏற்படும்

## பாக்.இராணுவ உயரதிகாரி பேச்சு

சிங்கப்பூர்,ஜூன்6

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தால்தான் இந்தியா - பாகிஸ்தான் இடையே நிரந்தர அமைதி ஏற்படும் என்று பாகிஸ்தான் இராணுவ உயரதிகாரி ஜெனரல் ஹசன் உல் ஹக் கூறினார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற பாதுகாப்புத்துறை அமைச்சர்கள், அதிகாரிகள் பங்கேற்கும் வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

இந்தியாவுடன் அமைதியை பராமரிப்பதில் பாகிஸ்தான் முனைப்புடன் உள்ளது. இருநாடுகளுக்கிடையிலான அமைதிப் பேச்சுக்களிலும் பாகிஸ்தான் அதிக அக்கறையுடன் செயற்படுகிறது. நீண்டகாலமாக தீர்க்கப்படாததாக காஷ்மீர் பிரச்சினை உள்ளது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால்தான் இருநாடுகளுக்கிடையே நிரந்தர அமைதி ஏற்படும்.

பாகிஸ்தான், இந்தியா, காஷ்மீர் ஆகிய முத்தரப்பும் ஏற்றுக்கொள்ளும் வகையில் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். இதற்கு அனைத்து தரப்பிலும் துணிவு, நேர்மை, பிடிவாதமின்மை தேவை.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் மற்ற எந்த நாடுகளை விடவும் பாகிஸ்தானைக் குறைத்து மதிப்பிடமுடியாது. அல்-கெய்தா பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் பாகிஸ்தானின் பங்கு முக்கியமானது. இதன் பொருட்டு 80ஆயிரம் வீரர்களைப் பணியில் ஈடுபடுத்தியது பாகிஸ்தான்.

ஆப்கானிஸ்தானில் ஐ.நா. மற்றும் சர்வதேச அமைதிப்படை நடவடிக்கைகள் வெற்றிபெற பாகிஸ்தானின் ஆதரவே முக்கிய காரணம். இதனை எவரும் மறுக்க இயலாது.

இதன்பொருட்டு, பாகிஸ்தான் பொருளாதார இழப்புடன், பெருமளவு உயிரிழப்பையும் சந்திக்க நேர்ந்தது. பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பைக் கொலைசெய்யப் பலமுறை பயங்கரவாதிகள் [illegible] அதில் அவர் தப்பினார் - என்றார் உல் ஹக்.

# கட்டணம் செலுத்தினால் அதிரடிப்படை பாதுகாப்பு: இந்திய மத்திய அரசு பரிசீலனை செய்கிறது

புது டில்லி,ஜூலை6

பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு ஆளாகாத முக்கிய பிரமுகர்கள் கட்டணம் செலுத்தினால் பாதுகாப்பு அளிக்க சிறப்பு அதிரடிப்படை ஒன்றை உருவாக்கப் பரிசீலித்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதிமுக்கிய பிரமுகர்களுக்குத் தற்போது எக்ஸ், ஒய், இஸட், இஸட் பிளஸ் ஆகிய நான்கு வகைப் பிரிவுகளில் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசு வழங்கும் பாதுகாப்புடன் மாநில அரசுகளும் பல்வேறு பிரிவுகளில் முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன.

தேசிய பாதுகாப்புப் படையின் கறுப்புப் பூனை கமாண்டோக்கள், சிஐஎஸ்எப், இந்திய-திபெத் எல்லைப் பொலீஸ், மத்திய பொலீஸ் படை போன்ற துணைநிலை இராணுவப் படையினரும் டில்லி பொலீஸ் முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றனர்.

இதன் காரணமாகத் துணைநிலை இராணுவம் மற்றும் பொலீஸ் படைகளின் பணிகள் பாதிக்கப்படுகின்றன. எனவே, முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக சிறப்பு அதிரடிப்படை அமைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனையை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. பயங்கரவாதிகள், மாபியா கும்பல்களின் அச்சுறுத்தலுக்கு ஆளாகாத முக்கிய பிரமுகர்களுக்கு இந்தப் படை பாதுகாப்பு வழங்கும். ஆனால், அவர்களிடம் கட்டணம் வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.67/32, தர்மலிங்கம் அவென்யூ, சீனிவாசகம் றோட், யாழ்ப்பாணம். (50867)

9 குட்டி போடக்கூடிய **Doberman Pincher** பெண் நாய், அல்சேஷன் ஆண் நாய் (கறுப்பு) **Doberman X Dane** குட்டிகள், புதிய நிலையில் உள்ள **OBITREC** உடற்பயிற்சி சாதனம் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. சிவராஜா அவன்யூ, பலாலி வீதி, திருநெல்வேலி. **T.P.:** 0777491062 (50881)

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

மானிப்பாய், கட்டுடையில் அமைதியான சூழலில் அமைந்துள்ள வீடும் அதனுடன் சேர்ந்த ஆறு பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கந்தையா இலட்சுமணன், யூ.எச்.சி.ஆர் தண்ணீர்த்தொட்டிக்கு அருகில். கட்டுடை, மானிப்பாய். (50893)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, பிரான்சில் நிரந்தர வதியுடமையுள்ள 9இல் செவ்வாய், உத்தரட்டாதி, முதலாம் பாதம் உள்ள, 1975, உயர் வெள்ளை மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. மொத்த பாவம் 68. தொடர்பு: 077 6184386 (50898)

## நாய் விற்பனை

Alsastion (பெண் ஒரு வயது) நாய் விற்பனைக்குண்டு. Greatdane (ஆண்) German Shepherd (ஆண்) நாய்கள் குறைந்த கட்டணத்தில் Crossingஇற்கு உண்டு. தொடர்பு: **Pragash T.P.: 077 3501011** (50852)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட **No.1 Original Prima Broiler** குஞ்சுகள்,பேட்டுக்குஞ்சுகள் 05.06.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, சன்னதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/49444)

தரமான பகீரா புறொயிலர் குஞ்சுகள் 07.06.2006 மாலை விநியோகிக்கப்படும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை - ஸ்ரான்லி றோட், P.ரவி - சாவகச்சேரி, றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம் - மாதகல் வீதி, பண்டத்தரிப்பு. **T.P.:** 222 2867, 222 3529 (50632)

## உளநோயாளர் பொருள்காட்சி

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை ஊழியர்களின் ஊக்குவிப்பால் வெளிக்கொணரப்படும் உளநோயாளர்களின் பொருள் காட்சி இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 4 மணிவரை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு யாழ்.சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் யாழ். பிராந்திய உள வைத்திய நிபுணர் டாக்டர் சா. சிவயோகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள். (173)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




யாழ். வண்.மேற்கு, ஐயனார்கோயிலடியைச் சேர்ந்த **கிருபாகரன் - ராஜினி** தம்பதியரின் செல்வப் புதல்வி **விதுர்சியா**

*தனது முதலாவது பிறந்த நாளை இன்று (06.06.2006) செவ்வாய்க்கிழமை நியூசிலாந்தில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.*

*இவரை அன்பு அப்பா, அம்மா யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அக்கா பிரியதர்ஷா, தங்கை தஜனிகா, மாமா, அத்தை, ஆஸ்திரேலியாவில் வசிக்கும் பிரபா சித்தப்பா மற்றும் பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் அன்னை காமாட்சி அம்பாள் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.*

**யாழ்ப்பாணம்.** (50901) (24-32-11-14) **ந.கருணானந்தராசா (பெரியப்பா).**

# கண்ணீர் அஞ்சலி

**எமது கல்லூரியின் முன்னாள் பழைய மாணவிகள் சங்கத் தலைவியும் இந்நாள் வரை எமது கல்லூரி வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிவருபவருமாகிய திருமதி வலளி சூரியகுமாரன் அவர்களின் அன்புக் கணவர்**

## திரு. கனகநாயகம் சூரியகுமாரன்

*(பேராசிரியர், ஐக்கிய நாடுகள் சபையின் ஆசியக் கிளையின் பதில் நிர்வாக அதிகாரி)*

**அவர்களின் மறைவுச் செய்தி கேட்டுத் துயருறுகின்றோம். அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அறிவுச்சுடர் அமரர் சூரியகுமாரன் அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகளைத் செலுத்துகிறோம்.**

**பாடசாலைச் சமூகம்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**யா/வட இந்து மகளிர் கல்லூரி.**

(50894)(32-14-11)

# மரண அறிவித்தல்கள்

## கிருஸ்ணபிள்ளை தெய்வானை

கரணவாய் கிழக்கு, மணற்பாதி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் திருமலை அன்புவெளிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணபிள்ளை தெய்வானை அவர்கள் நேற்று (05.06.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குமரேசு - முத்துபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் பாலகிருஸ்ணன் விஜயலக்ஷ்மியின் அன்புத் தாயும் குமரேசு இராசேந்திரம் (கனடா), பாலகிருஸ்ணன் (உதயன் பணிமனை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இராசேந்திரம் சீதாதேவி (கனடா), பாலகிருஸ்ணன் திலகவதி ஆகியோரின் மைத்துனியும் திருமதி அருமைராசா பாமினி (கனடா), இராசமூர்த்தி (கனடா), உதயகுமார் (கனடா), பகிரதன் (கனடா), கோமதி (கனடா), சாந்தி (கனடா), உதயகுமார் நிருபா (ஆசிரியை - பிரதேச சபை கரவெட்டி), கணேசலிங்கம் கவிதா (ஹொலன்ட்), -ந்திரசேகர் ஸ்ரீதேவி, பாலகிருஸ்ணன் குகதாசன் (பிரான்ஸ்)ஆகியோரின் மாமியும் பாலகிருஸ்ணன் முரளிதரன் (டுபாய்), ராஜ் (பிரான்ஸ்), நிமால், நிசாந்தினி, நிரோசிசா, லக்ஸ்சிசா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 268, அன்புவெளிபுரம் இல்லத்தில் நடைபெற்று, இன்று (06.06.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்புவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யாழ்ப்பாணம்.*
*2222560*
(50900)(32-14-11)

*தகவல்:*
**உதயகுமார் நிருபா**
*(மருமகள்).*

## முத்துச்சாமி அன்ரனிறாஜ் (நாகராசா)

(முன்னாள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர், யாழ்ப்பாணம்)



முத்துச்சாமி அன்ரனிறாஜ் (நாகராசா) அவர்கள் நேற்று (05.06.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஞானப்பிரகாசம் தம்பதிகளின் மருமகனும் திரு.திருமதி முத்துச்சாமி தம்பதிகளின் மகனும் புதுமைமலரின் (வவா) அன்புக் கணவரும் அருள்ராஜ், மரியராஜ், மரியமலர், ஜீவமலர், புஸ்பமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாவற்குழி புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை (07.06.2006) புதன்கிழமை காலை 9 மணிக்கு ஒப்புக்கொடுத்து, பின் பூதவுடல் அந்தோனியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாவற்குழி ம.வி.முன் வீதி,*
*நாவற்குழி.*
(50907)(32-14-11)

*தகவல்:*
**அ.புதுமைமலர்**
*(மனைவி).*

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**"உயிர்ப்பும் உயிரும் நானே**
**என்னில் விசுவாசம் கொள்பவன்**
**இறப்பிலும் வாழ்வான்" (யோவா 11:25)**

அன்னை மடியில் 23 - 05 - 1933



ஆண்டவன் அடியில் 07 - 05 - 2006

## திருமதி ஜோர்ஜ் ஞானமலர்

**பெருநகராம் சுன்னாகம் தனில்**
**புகழ் பூத்த வைத்தியரைக் கரம்பற்றி**
**இல்லறத்தை நல்லறமாய்க் காத்து வளர்த்த**
**உத்தமியே!**
**ஆறாது உம் நினைவால் வாடுகிறோம் உம்பதியில்**
**மீளாதோ உம் இன் உயிரென ஏங்குதம்மா நின்**
**உறவுகள் இங்கு**
**உம் ஆன்மா இறைவனிடம் நித்தியமாய் இளைப்பாற**
**வேண்டுகிறோம் உளம் உருக கண்ணீரால்**
**அஞ்சலித்தோம்.**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (06.06.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சூராவத்தை புனித திரேசம்பாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியிலும் தொடர்ந்து இவரில்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டும்படி அன்புடன் அழைக்கின்றோம். எமது அன்புத் தாயாரின் இழப்பினால் நாம் தவித்து நின்றவேளையில் எமக்குப் பலவழிகளிலும் உதவியவர்கள், ஆறுதல் அளித்தவர்கள் அனைவரையும் நாம் அன்புடன் நோக்குகின்றோம்

*Dr.சுப்பிரமணிய வீதி,*
*சுன்னாகம்.* (50902)(32-14-11)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

# அழைக்கின்றோம்!

**தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை - 8**

அன்புடையீர்,

மேற்படி நிகழ்வு இன்று (06.06.2006) செவ்வாய்க்கிழமை பி.ப.3.30 மணிக்கு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

**பேருரை வழங்குபவர்:**

**திரு.ஆ.சபாரெட்ணம் (B.A.Ceylon )** (ஓய்வு பெற்ற ஆசிரியர், பத்திரிகையாளர்)

**விடயம்:**

*"ஸ்பானிய- தமிழ் அனுபூதிநெறிப் போக்குகள்: புனித அவிலா திரேசம்மாள் -காரைக்கால் அம்மையார் ஒப்பீடு"*

**Spanish- Tamil Mystical Trends: A Comparative Study Of St.Theresa Of Avila and Karaikkal Ammaiyar.**

**உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

**தனிநாயகம் தமிழ் மன்றம்,**
**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

விளம்பர அனுசரணை: **UNIT**

(சி 49539 (39-32-14-11)

# IIS

**A/L பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் விரைவில் ஆரம்பம்**

விபரம் 07.06.2006 உதயனில்

இயக்குநர் **IIS**
இல. 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2831

## விற்பனைக்கு

**பொருள்கள்**

1. கணனி சார்பான அனைத்து பொருள்கள் (Printer, Scaner, Table, Chairs)
2. வீட்டுப்பாவனை மின்னுபகரணங்கள்
   1. குளிர்சாதனப் பெட்டி 2. T.V. stand
   3. Fan 4. Grinder

மற்றும் ஏனைய பொருள்கள்

**தொடர்புகளிற்கு: 0777 228581**

(50904 )(32-14-11)

## கோவிலில் இருந்த சிமெந்துப்பைகள் திருட்டு

யாழ்ப்பாணம் ஜூன் 6

கோயில் இராஜகோபுர வேலைகளுக்கென சேகரித்து வைக்கப்பட்டிருந்த சிமெந்துப் பைகளைத் திருடர்கள் திருடிச்சென்றிருப்பது தெரியவந்துள்ளது.

ஈவினை மத்தி கற்பக விநாயகர் கோயிலிலேயே இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராஜகோபுர வேலைகளுக்கென ஆலய மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த சிமெந்துப் பைகளே திருடப்பட்டுள்ளன.

## உலக உணவுத்திட்ட வேலை தொடர்பான பயிற்சிப்பட்டறை

தென்மராட்சி,ஜூன்6

சாவகச்சேரிப் பிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் அமுல் நடத்தப்படும் வேலைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி வரை சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் இந்தப் பயிற்சிப் பட்டறையை ஒழுங்கு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டங்களை சபையின் கீழ் அமுல்படுத்தும் நிறுவன பிரதிநிதிகள் தலா ஒருவரைத் அதில் கலந்கொள்ளுமாறு சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் கேட்டுள்ளார். (122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறைக்கான எதிர்வு தமிழீழ மாணவர் எழுச்சி!

**இன்று அனுஷ்டிக்கப்படும் தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன் னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

இன்று தமிழீழ எழுச்சி நாள். காலந்தோறும் ஏற்பட்டிருந்த தமிழீழ மாணவர் எழுச்சி இப்போது உச்சமடைந்து வருகின்றது. தமிழ்மக்கள் விடுதலைப் போராட்டத்தின் அடிக்கட்டுமானங்களில் மாணவர் எழுச்சி என்பதும் உன்னத உரமாக உள்ளது. இன்றைய மாணவர் எழுச்சிநாளில் தமிழ் மாணவர்களின் சுதந்திரம் - நசுக்கப்படுதல், ஒடுக்கப்படுதல் என்பதில் சிறைப்பட்டிருப்பதை உலகின் கண்களுக்கு காட்டவேண்டியுள்ளது.

தமிழ் மாணவர்கள் கொலை செய்யப்படுதல், பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுதல், தாக்கப்படுதல், கைதுசெய்யப்படுதல் போன்ற அரச பயங்கரவாத வன்முறைகளுக்கு உள்ளாகி வருகின்றார்கள். அநீதி மிகுந்த இவ்வாறான அரச பயங்கரவாத செயல்கள் குறித்து யாரிடம் முறையிடுவது? இவற்றை மாணவர் எழுச்சியின் மூலம் சரிசெய்யலாம் என்பதே உண்மை. பாலியல் வன்முறைக்கு உள்ளாகி கொலை செய்யப்பட்ட மாணவி கிருசாந்தி குறித்தும் திருமலை ஐந்து மாணவர்கள் குறித்தும் இது வரை எந்தப் பதில்களும் கிடைக்கவில்லை. விசாரணைக்குழுக்கள் மூலமும் கண்டனங்கள் - அனுதாபங்கள் மூலமும் ஸ்ரீலங்கா அரசு சரிசெய்து வருகின்றது. இன்னுமாக கொடிகாமம் அருள்அஜந்தன், வரணி வைகுந்தன் போன்று பல மாணவர்கள் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா அரசும் தமிழ் துரோக சக்திகளும் தமிழ் மாணவர்கள் மீது ஏன் குறி வைக்கின்றார்கள் என்பது அவதானிக்க வேண்டிய கேள்வியாகும். ஓர் இனத்தின் அடக்குமுறைக்கு எதிராக கேள்வி எழுப்பவேண்டிய பங்கு அந்த இனத்தின் படித்த சமூகத்திற்கு உரிய தலையாய கடமையாகும். அரச ஆக்கிரமிப்பு - தமிழர் தாயகப்பகுதிகளில் அப்பாவிப் பொதுமக்கள் மீது வன்முறைகள் கையாளப்படுகின்ற போது அதைத் தட்டிக் கேட்டு எழுச்சிகொண்டு வந்திருக்கிறது தமிழ் மாணவர் சமூகம்.

**கு.பா.தீபச்செல்வன்**
**யாழ். பல்கலைக்கழகம்**

ஆகவே தமிழ்மாணவர்களை அழிப்பதன் மூலமும் நேரடியாக அடக்குவதன் மூலமும் தமிழர் விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தலாம். அல்லது நசுக்கலாம் என்று ஸ்ரீலங்கா அரசு நம்புகிறது. இதற்காக ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல்வேறு பிரயத்தனங்களை மேற்கொண்டிருக்கிறார். அதில் ஒன்றுதான் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு ரட்ணஜீவன் ஹூலை துணைவேந்தராக தெரிவுசெய்திருந்தது. தமிழர் துரோகத்தனம் கொண்ட ஜீவன் ஹூலை தெரிவு செய்வதன் மூலம் பல விடயங்களை திரைமறைவில் சாதிக்க நினைத்த மகிந்த அதில் தோல்வி அடைந்திருக்கிறார். தமிழ் மாணவர்களின் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க முடியாத ஜீவன் போல் தனது துணைவேந்தர் பதவியைக் கைவிட்டு தலைமறைவாகியிருக்கிறார். இது குறிப்பிட்ட இந்த சமூகத்தின் பலத்தையே பறைசாற்றுகின்றது.

தமிழ் மாணவர்கள் படையினரால் தாக்கப்படுவது என்பது அவர்கள் நாளாந்தம் அனுபவிக்க வேண்டிய துயரமாகவுள்ளது. நானும் என் நண்பர்களும் பலமுறை இராணுவத்தால் தாக்கப்பட்டிருக்கிறோம். இன்னும் பல மாணவர்கள் தாக்கப்பட்டதாக கூறியிருக்கிறார்கள் மாணவர்களின் அடையாள அட்டைகளைப் பறிக்கும் படையினர் அவற்றை மீளப்பெறுவதற்காக தமது படைமுகாம்களுக்கு வரவேண்டும் என்று கூறுவதும் அங்க சென்றவுடன் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்படுவதுமே இலங்கை அரசியலில் இன்றைய தமிழ் மாணவர்கள் அனுபவிக்கும் சுதந்திரமாக உள்ளது


சரி இந்த தாக்குதல்கள் குறித்து முறைப்பாடுகள் செய்யவேண்டியிருந்தால் துணைவேந்தர் ஊடாக தெரியப்படுத்தலாம் என்று பல்கலைக்கழக அறிவிப்புப் பலகையில் எழு தப்பட்டுள்ளது. இந்தக் தாக்குதல்கள் குறித்து எந்த மாணவர்களும் எதையும் வெளியே சொல்லுவதில்லை. ஏனென்றால் மாணவர்களின் பிரச்சினை பற்றி படையின ரோடு பேசத்தக்க அதிகாரமுடைய துணைவேந்தரே படையினரால் தாக்கப்பட்டுள்ளார் அப்படி யென்றால் இந்த முறைப்பாடுகளுக்கு எப்படி சாத்தியமிருக்கும்.

19.12.2005 அன்று யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மோகனதாஸ், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள் என்று ஒட்டுமொத்தக் கல்விச் சமூகமும் படையினரால் தாக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ் மாணவர்களிடைய கற்றல் வரலாற்றிலே அது மறக்கமுடியாதவடு தாங்கிய ஒரு சம்ப வம்.

எழுச்சி என்பது அடக்கப்படும் போது நிமிர்ந்துநிற்கும் என்றே சொல்லப்படுகிறது. இது தமிழ் மாணவர்சமூகம் மீதான அடக்குமுறைக்கும் எழுச்சிக்கும் கூட மிகவும் பொருத்தமாக இருக்கும். ஸ்ரீலங்கா அரசு தமிழ் மாணவர்கள் மீது இவ்வாறான வன்முறைகளை பிரயோகிப்பதன் மூலம் அவர்களை அடக்கிவிட முடியாது. மாறாக அவர்களிடத்தில் எழுச்சி ஏற்பட இந்த வடுக்களே காரணமாகின்றது.

தியாகி லெப். கேணல் திலீபன் மாணவராக இருந்து தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு அகிம்சையால் உயிர் கொடுத்தவர். மாணவ மாவீரன் பொன். சிவகுமார் போன்றோரின் விடுதலைப் பணி மாணவர் சமூகத்திலிருந்து வெடித்துக்கிளம்பியது. இந்த அடிப்படையில் தமிழர் விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து தமிழ் மாணவர்கள் எழுச்சியும் பங்கும் இணைந்தே பயணித்து வந்திருக்கிறது.

தமிழீழ மாணவர் எழுச்சி என்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல. அது இன்றைக்கும் மட்டும் ஏற்படுகிற ஒரு நாளுக்கான தனித்த அடையாளமும் அல்ல. எப்பொழுதும் என்றைக்கும் நடப்பில் இருக்கிற விடுதலை உணர்வு எழுதுகோல்கள் ஏந்தி எழுதிக் கொண்டிருந்தவர்கள் போராயுதங்கள் ஏந்தும் புதுவித போராளிகளாகவும் புத்தகங்களைச் சுமந்து படித்தவர்கள் யுத்தகளங்களில் குதித்து சமராடவேண்டிய தேவை தமிழ் மாணவர்களுக்கு காலம் வழங்கியிருக்கிறது. இதற்கான அடையாளங்களில் சிலவற்றை வேண்டுமானால் இன்றைய மாணவர் எழுச்சிநாள் உணர்த்தலாம். அதன் முழு உக்கிர வடிவத்தை காலமே வெகுவிரைவில் தரிசிக்கும்.




ஆலயத்தில் புதிதாக நிறுவப்பட்ட இரண்டு இராஜகோபுரங்களின் முன்புறத்தோற்றத்தையும் ஆலயத்தின் பின் வீதியில் நிறுவப்பட்ட அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட தூபியையும் படங்களில் காணலாம்.
(படங்கள் : தமிழ்இனியன்)

# நல்லூர் சிவன் ஆலயத்தில் புதிதாக நிறுவிய இராஜகோபுரங்களின் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன்6

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமிக்கும் (நல்லூர் சிவன் ஆலயம்) புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு இராஜ கோபுரங்களுக்கும் நாளைமறுதினம் வியாழக்கிழமை ஜீர்ணோத் தாரண அஷ்டபந்தன நூதனப் பிரதிஷ்டா மகாகும்பா பிஷேகம் நடைபெறவுள்ளது.

மகாகும்பாபிஷேகக் கிரியைகள் கடந்த 29ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. இன்று செவ்வாய்க்கிழமையும் காலை மாலை என யாகபூசைகளும் ஹோமங்களும் இடம்பெறும்.

நாளை புதன்கிழமை காலை விசேட திரவி ஹோமம் மாலை பிம்பசுத்தி, பிரம்பரட் சாபந் தனம் என்பன இடம்பெறும்.

நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை யாகபூசை மகாபூரணாகுதி என்பன இடம் பெற்று காலை 9 மணிக்கு கும்ப உத்தாபனமும் தொடர்ந்து இராஜகோபுர கும்பாபிஷேகம் தூபி கும்பாபிஷேகம் என்பன இடம் பெறும். பின்னர் 11.15 மணி முதல் 11.50 இற்கு இடையிலான சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு மண்டலாபிஷேகம், மாலை 5 மணிக்குத் திருக்கல்யாணம் திருவீதியுலா என்பன இடம்பெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

தேவஸ்தான தர்மகர்த்தா சிவஸ்ரீ கா. இரத்தின கைலாசநாதக் குருக்கள் மற்றும் சிரேஷ்ட சிவாச்சாரியர்களான கலாநிதி சித்தானந்த பானு கோவை சுப்பிரமணியக் குருக்கள், முன்னேஸ்வரம் தியாராஜக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகளுடனும்

சர்வபோதகாச்சாரியார் சிவஸ்ரீ தா.மகா தேவக்குருக்களின் அனுசரணையுடனும் முன்னேஸ்வரம் சிவஸ்ரீ ஸ்ரீநிவாசக் குருக்கள் கோப்பாய் சிவஸ்ரீ ப.முத்துக்குமார சுவாமிக் குருக்கள் ஆகியோர் பிரதிஷ்ட பிரதம குருமாராகவிருந்து கும்பாபிஷேகத்தை நிகழ்த்துவர்.

(190-12)


## காணவில்லை



யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் தரம் 9 D இல் கல்வி கற்கும் இருபாலை கிழக்கு, கேணிக் குளத்தடியைச் சேர்ந்த தூயஞானச்செல்வம் தர்மேஸ்(வயது - 14) சுமார் 4½ அடி உயரமும் பொதுநிறமும் கொண்ட இவரை 01.06.2006 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் காணவில்லை.

இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள், கண்டவர்கள் மேற் கூறிய முகவரியுடனோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*இருபாலை கிழக்கு,*
*கேணிக்குளத்தடி,*
*தொ.பே.: 0779862528*

(50913)

தகவல்:
சு.தூயஞானச்செல்வம்
(தந்தை)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது ஊரைச் சேர்ந்த பின்வரும் மாணவர்கள் க.பொ.த. சா.தரத்தில் சித்தியடைந்து க.பொ.த. உயர் தரம் படிக்க தகுதி பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

1. *செல்வன் இராசா சஜீவன்*
2. *செல்வன் ஜெயரத்தினம் ஜெனோசன்*
3. *செல்வன் இராசேந்திரம் டிசாந்த்*
4. *செல்வன் சிறீகரன் விஜயகாந்த்*
5. *செல்வன் இராசரத்தினம் றமீன்*
6. *செல்வி சிறீகரன் பிரியதர்சினி*

**தெல்லிப்பழை வாலிபர் ஐக்கிய சங்க**
**சனசமூக நிலையம்,**
**யூத் யூனியன் விளையாட்டுக் கழகம்**
**தபாற்கந்தோர் அருகில்**

(அ/49552)

**ராஜா** யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த

**பட்டியல்**

புதிய வெளியீடு

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம் பீட்டர் நிட்சஸ்சனின்

**கிங் - கொங் King Kong**

தங்கத் தமிழ் மொழியில்

(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)

காட்சி நேரம்: 10.30, 2.30


## பின்னுறுதித் தீர்வை

**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்**

**கணேசலிங்கம் காண்டீபன்**
தச்சன்வளவு, புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

வழக்காளி

வழக்கு இலக்கம்
மணநீக்கம்/414

எதிராக

**காண்டீபன் சுதர்சினி**
நேசரத்தினம் மேற்பார்த்து,
சிவன் கோயிலடி,
ஒட்டிசுட்டான்.

எதிராளி

இவ்வழக்கு 2006 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி சி. வீரகத்திப்பிள்ளை அவர்களின் அனுசரணையுடன் சட்டத்தரணி சி.சுரேந்திரன் அவர்களும் பிரசன்னமாயிருக்க மன்றின் கட்டளைப்படி 23.07.2004ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் அழைப்புக்கட்டளை விளம்பரம்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்டு திரும்பல் திகதியாகிய 03.08.2004ஆம் திகதி மறுமொழி அணைப்பதற்காக தவணை கோரி 22.03.2006ஆம் திகதி எதிராளியும் எதிராளியின் சட்டத்தரணியும் மன்றுக்கு சமுகமளிக்காமையால் இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின் அனுமதியைக் கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராது, வ1 ஆவணம் வழக்காளி மன்றில் அளித்த சாட்சியம் மற்றும் குடும்ப ஆலோசகர் திருமதி க.சிவராசா அவர்கள் 30.05.2005 திகதியிட்டு மன்றுக்கு அணைத்த அறிக்கை ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்து பரிசீலித்து எதிராளி வழக்காளியை அமைநிலையான வன்ம உறவறுப்பு செய்த குற்றத்திற்காக வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 2000ஆம் ஆண்டு ஆனி மாதம் 3ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமானதாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

அத்துடன் வழக்காளி சாட்சியத்தில் கூறியவாறு குடும்ப ஆலோசகரின் அறிக்கையையும் முழுமையாக பரிசீலித்து வழக்காளியின் பிராதில் 5ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு வழக்காளியும் எதிராளியும் திருமணம் முடித்த 03.06.2000இல் இருந்து 6 மாதத்தில் எதிராளிக்கு பூரண வளர்ச்சி அடைந்த குழந்தையாக பிறந்த கோபிகன் என்ற குழந்தைக்கு வழக்காளி தந்தை இல்லையென்றும் வெளிப்படுத்தி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியில் இருந்து மூன்று மாத காலத்திற்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2006ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20 ஆம் திகதி

வரைந்தது
(சி.வீரகத்திப்பிள்ளை)
வழக்காளியின் சட்டத்தரணி

மாவட்ட நீதிபதி
**R.T.VIGNARAJA**
District Judge Jaffna.

நீதிமன்றக் கட்டளைப்படி
**து.சிறீமோகன்**
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(50906)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லைப்பிட்டி படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்தனர். அது தொடர்பான அறிக்கை ஒன்று சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரின் உத்தரவின்பேரில், யாழ். பொலீஸ் பிரிவு இன்ஸ்பெக்டர் கையெழுத்திட்டு நேற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

படுகொலைகள் தொடர்பான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு போதிய சாட்சியங்களோ, தடயங்களோ தமக்குக் கிடைக்கவில்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அல்லைப்பிட்டிக் கொலைகளுடன் தொடர்புபட்ட கடற்படையினரை அடையாளம் காட்டமுடியும் என்று தெரிவித்த பெண்ணின் வாக்குமூலத்தில் முரண்பாடுகள் காணப்படுகின்றன என்றும் அறிக்கை சுட்டிக்காட்டியது.

குறித்த "பெண்ணின் வாக்குமூலம் ஏனையவர்களினது சாட்சியங்களில் இருந்து வேறுபடுகின்றது. வீட்டிற்கு முன்பாக உள்ள ஒரு முகாமைச் சேர்ந்த படையினரே சம்பவத்தில் தொடர்புபட்டவர்கள் என்று அவர் கூறியுள்ளார். ஆனால், அங்கு இரு கடற்படை முகாம்கள் உள்ளன" - என்று அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இந்த முரண்பாடு காரணமாக கடற்படையினரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தமுடியவில்லை என்று பொலீஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். விசாரணைகளை மேற்கொண்டு நடத்த நீண்டகால அவகாசம் வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

பொலீஸாரின் அக்கோரிக்கையை நீதிவான் நிராகரித்தார். குறித்த பெண் தன்முன்பாக வாக்குமூலம் அளிக்கும்போது தமது வீட்டுக்கு நெருக்கமாக இரு கடற்படை முகாம்கள் இருக்கின்றன எனக் குறிப்பிட்டிருந்தார் எனவும் தெரிவித்த நீதிவான், எனவே, பொலீஸார் கூறும் காரணம் ஏற்புடையதல்ல எனவும் சுட்டிக்காட்டினார்.

விசாரணைகளைத் துரிதப்படுத்தி எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பாக சம்பந்தப்பட்ட கடற்படையினரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். விசாரணைகள் ஒழுங்குமுறையாக நடைபெறவில்லை எனவும் தனது உத்தரவில் தெரிவித்த நீதிவான்,

கொழும்பில் இருந்து வந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலீஸ் குழுவின் அதிகாரி நீதிமன்றில் தோன்றித் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்காதமை குற்றவியல் சட்டப் பிரிவுகளை மீறும் செயல் எனவும் கண்டித்தார்.

இந்த விடயத்தைத் தான் பொலீஸ்மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

விசாரணைகளின்போது, பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைப் பேணுவதற்காக மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் கொழும்பிலிருந்து வந்திருந்தார்.

"பொலீஸாரின் வேலை நீதிமன்றுக்குரிய சான்றுகளைச் சமர்ப்பிப்பதுதான். சான்றுகள் தொடர்பாக ஆய்வுசெய்து சான்றுகளின் முரண்பாடுகளைக் கவனிப்பது நடவடிக்கைகளை எடுப்பது நீதிமன்றத்தின் வேலை; பொலீஸாரின் பணி அதுவல்ல - என்று சுட்டிக்காட்டினார் சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல்.

கடந்தமாதம் 19ஆம் திகதிய 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையில் தீவுப்பகுதிச் சம்பவத்திற்கும் படைத்தரப்பினருக்கும் எதுவித தொடர்பும் இல்லையென பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார் என வெளியான செய்தியும் சட்டத்தரணியால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டது. (ம-12)

# தமிழீழ மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடும் மாணவர்கள் ஊர்வலமாக பண்பாட்டு மண்டபத்தைச் சென்றடைவர். அங்கு நிகழ்வுகள் நடைபெறும். கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 5 ஏ இற்கு மேல் பெறுபேறு பெற்ற 40 மாணவர்கள் பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதனை விட பிரதேச ரீதியாகவும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. வட்டக்கச்சி பிரதேசத்திற்கான நிகழ்வு இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையிலும், பரந்தன் பிரதேச நிகழ்வு பரந்தன் இந்து ம.வியிலும், அக்கராயன் பிரதேச நிகழ்வு ஸ்கந்தபுரம் இல.1 அ.த.க.பாடசாலையிலும், முழங்காவில் பிரதேச நிகழ்வு முழங்காவில் ம.வியிலும், பூநகரி பிரதேச நிகழ்வு செல்லியா தீவு அ.த.க.பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

இவற்றைவிட விசுவமடுப் பிரதேசத்துக்கான நிகழ்வு தருமபுரம் இல.1 அ.த.க.பாடசாலையிலும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

வடமராட்சி கிழக்கில் உடுத்துறை ம.வியில் பிற்பகல் 3 மணிக்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பிரதான நிகழ்வு புதுக்குடியிருப்பு மாவீரர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. அங்கு நேற்றுமுன்தினம் தமிழீழ சாரணியத் திரள்' நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நேற்றும் நடைபெற்ற இந் நிகழ்வு இன்று மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுடன் நிறைவுபெறும்.

இந்நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை தமிழீழ மாணவர் அமைப்பினரும் பிரதேச அரசியல் துறையினரும் மேற்கொண்டு வருகின்றனர். (ம-405)

# தாய்லாந்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்க தாய்லாந்து அமைச்சர் முன்னர் எடுத்த முயற்சி கை கூடவில்லை என்றும் -

இந்தத் தகவல் குறித்து தாய்லாந்து இரகசியப் பொலீஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது அதற்கான தடயங்கள் எதுவும் கிட்டவில்லை என்றும் தாய்லாந்து அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

மீண்டும் ஒரு தடவை இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் தொடர்பு கொண்டு தகவல் பற்றிக் கேட்டறிய அவர் முயற்சிக் கப்போகிறார் எனவும் கூறியுள்ளார்.

இலங்கையில் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்ட எடுக்கப்படும் முயற்சிகளுக்குத் தாய்லாந்து என்றும் உதவும் எனவும் - தனது அண்டை நாடுகளின் உள் விவகாரங்களில் தாய்லாந்து அரசு ஒரு போதும் தலையிடாது என்றும் அமைச்சர் டாக்டர் கன்தாதி வலியுறுத்தினார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-க)


கணக்கீடு
A/L 2008
புதிய பிரிவு ஆரம்பம்
வியாழன் 1P.M.
A/L 2007
வியாழன் 2P.M.
S.தவா B.COM. (Hons) (Acc.Sp.)
NEW SCIENCE COLLEGE JAFFNA

Group Class
CHEMISTRY
விரும்பிய அலகுகளை
A/L 2007 & 2008
மாணவர்கள் கற்கலாம்
தொடர்புகளுக்கு:-
NEW SCIENCE CENTRE
By: அன்பழகன்

Diploma Courses
Microsoft Office 1500/=
Desktop Publishing 1750/=
Hard Ware 1750/=
Certificate Courses
Ms Word Ms Power Point
Ms Excel Ms Access
Photo Shop 8 Corel Draw 12
Page Maker HTML
CATWAS.COM
# 26 Somasundram Avenue Chundukuli, Jaffna.
TP No: 021 2223805


# இலங்கை வன்முறைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள பேச்சுகள், மனித உரிமை ஆணைக் குழுவுக்கான நியமனங்களில் ராஜபக்ஷ அரசு வெளிப்படுத்திய அரசியல் ஆதிக்கம், தொடர்ந்து நடைபெற்று வரும் உக்கிரமற்ற யுத்தம் ஆகியவை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை மிகுந்த கவலை அடைகிறது.

கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் சுமார் 200 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கிழக்கிலங்கையில் சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். முழு அளவில் நடைபெறும் இந்த வன்முறைகளால் மனித உரிமைகள் குறிப்பாக இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகள் கடுமையாகப் பாதிக்கப்படும்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கான நியமனங்களில் அரசு காண்பித்துள்ள அரசியல் சாசனத்துக்குப் புறம்பான ஆதிக்கத்தால் ஆணைக் குழுவின் செயல்திறன் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

25 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அண்மையில் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள், 1995-96 காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கையில் காணாமல் போனமை போன்ற சூழ்நிலையை உருவாக்குமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

எனவே, மனித உரிமை மீறல்கள் வன்முறைகள் குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ள சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு சர்வதேச சமூகம் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்கவும் கொலைகள் மற்றும் காணாமல் போதல்கள் குறித்து செம்மையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவும் நடவடிக்கை வேண்டும்.

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகள் சர்வதேச மனித உரிமை சட்ட விதிகளைப் பேணி அப்பாவி மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத சூழ்நிலையை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

யுத்தத்தாலும், ஆழிப்பேரலையாலும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உரிய, நிலையான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு புதிய ஆணையாளர் ஒருவரை உடனடியாக நியமிப்பதன் மூலம் மனித உரிமைகளில் உள்ள ஈடுபாட்டை அரசு காண்பிக்க வேண்டும்.

பொதுமக்களை நோக்கிய வன்முறைகளை நிறுத்த வேண்டும்." - என்றார் அவர். (ம-க)

# நீர்கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட 35 தமிழ்ப் பெண்கள் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களில் யாழ்ப்பாணம், உரும்பிராயைச் சேர்ந்த சுகந்தினி (வயது - 26) என்ற யுவதி ஆஸ்துமா நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார். நேற்று அதிகாலை இந்த யுவதிக்குத் திடீரென நோயின் தாக்கம் அதிகமாகியது. இதனால் பரபரப்படைந்த ஏனைய தமிழ் யுவதிகள் சிறைச்சாலை அதிகாரிகளிடம் நிலைமையைக்கூறி, இந்த யுவதிக்கு உடனடி மருத்துவ வசதிகளைச் செய்துகொடுக்குமாறு கேட்டிருக்கின்றனர்.

ஆனால், சிறைச்சாலை நிர்வாகம் இதனைக் கவனத்திற்கொள்ளவில்லை. மருத்துவர்கள் எவரும் அங்கு வராத காரணத்தால் பலபேர் பாத்திருக்க கொஞ்சம் கொஞ்சமாக யுவதியின் உயிர் பிரிந்தது.

இந்தச் சம்பவம் குறித்து நேற்றுக்காலை வேளையில் சிறைச்சாலை நிர்வாகம் நீர்கொழும்பு பொலிஸாருக்கு அறிவித்தது. இதனையடுத்து சிறைச்சாலைக்கு விரைந்த பொலீஸார் அங்கிருந்த இதர பெண்களிடம் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர்.

சிறைச்சாலை நிர்வாகத்தின் அசமந்தப் போக்கினால் ஏற்பட்ட இந்தச்சம்பவம் நீர்கொழும்பு சிறையிலுள்ள தமிழ்க் கைதிகளிடேயே பெரும் பரபரப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

# மட்டு. சிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரகுமார் மற்றும் சிறைக் காவலர்களான எதிர்மன்னசிங்கம் ஜெகஜோதி, சுந்தரலிங்கம் சிவானந்தன் ஆகியோர் நேற்று மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் என்.எஸ்.எம். அஜ்மீர் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்களை பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி இவர்கள் குறித்த குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ம-க)

# ஒஸ்லோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"கடல் போக்குவரத்து விடயத்தில் நாம் எந்த விட்டுக் கொடுப்பையும் செய்யப் போவதில்லை. அந்தப் பேச்சுக்கே இடமில்லை. நாம் தலைவரின் விசேட செய்தி ஒன்றையே இந்தச் சந்திப்புக்கு எடுத்துச் செல்கிறோம். ஒஸ்லோவில் எமது நிலைப்பாட்டுக்கு அரசு இணங்கினால் அமைதிக்கான முயற்சிகள் தொடரும். இல்லையேல் எல்லாம் அடைபட்டுப் போகும். தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் அராஜகங்களை நிறுத்துமாறும் இங்கு வலியுறுத்தவுள்ளோம்."

- என்றார் தமிழ்ச்செல்வன்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 15 . 07 . 1932



உதிர்வு 23 . 04 . 2006

### அமரர் நாகமுத்து திருச்செல்வம்

(சமாதான நீதிவான் - J.P)

*அஞ்சிடா நெஞ்சம் கொண்ட திருச்செல்வமே*
*அஞ்சிடாமல் சாதனைகள் பல படைத்தாய்*
*பிறந்த மண்ணையும் மக்களையும் முன்னேற்றத் துடித்தாய்*
*நீ அழிந்தாலும் உன் கனவு நடந்தே தீரும் ஐயா!*

உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம் ஐயா!

முன்னின்று உதவி செய்தும் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாரந்தனை வட மேற்கு,
தம்பாட்டி, ஊர்காவற்றுறை.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சண்முகநாதன்

செத்தாவத்தை, மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் றெட்பானா சந்தி, விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சண்முகநாதன் நேற்றுக் காலமானார்.

அன்னார் இரத்தினாவதி (செல்லம்) அவர்களின் அருமைக் கணவரும் மலர்விழி (மீசாலை), கோணேஸ்வரன் (வலயக் கல்விப் பணிமனை, முல்லைத்தீவு), போதினி (பொம்பி - பிரதேச சபை, மல்லாகம்), கலைவாணி (கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு) ஆகியோரின் தந்தையும் சசிகாந்தன் (மீசாலை), யோகரஞ்சன் (முல்லைத்தீவு, உடையார்கட்டு ம.வி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2006) அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் 12ஆம் கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.கோணேஸ்வரன் (மகன்).

## கண்ணீர் அஞ்சலி

எமது கூட்டுத் தாபனத்தில் கடமையாற்றும் சக ஊழியர் திரு.சி.சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு மனைவி

### திருமதி றஜனிதேவி சுந்தரலிங்கம்

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்,
பெற்றோலியக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை.

(50916)


விக்னா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி றோட், யாழ்.
O/L பிரிவு 4 DAY CLASS
ஆரம்பம்:09.06.2006 (8.30 - 2.30)
* பிரிவு 5 மிக விரைவில்
* இவ்வருடம் பிரிவு 6 மட்டுமே
* தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து தரப்படும்.
* யாழ் நகரில் O/L வகுப்பிற்கு அதிகூடிய மாணவர்கள் கல்வி கற்கும் ஒரே நிறுவனம். (சி-49554)

பிரிவு: II A/L 2007, 2008
கலை, வர்த்தகப் பிரிவுகள்
Tam - M.சுரேஸ் Log. - P.கமல்
H.c. - சத்தியதாசன் Dra. - I.சத்தியா
Eco. - P.சன் Po.Sc. - T.திருமுருகன்
Geo. - K.சிவகரன் Acc. - S.வின்சன்
B.st. - K.சாந்திநாதன் Eng. - S.ரூபன்
ஆரம்பம்: 07-06-2006 4 p.m.
திகழ் கல்வி நிறுவனம்
(50890) கே.கே.எஸ். வீதி, இணுவில்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org